# காலை முரசு

பக்கங்கள் 30

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | சித்திரை 20 வெள்ளிக்கிழமை 02.05.2025 | அதிர்வு 271


டிசம்பரில் ஜனாதிபதியாக விரும்பும்

## சஜித்தின் கனவுக்கு பிரதமர் நெத்தியடி!



“எமது மக்கள் அலையைக் கண்டு எதிர்வரும் ஆகஸ்ட் மற்றும் டிசம்பர் மாதமளவில் 08

## நல்லை ஆதீன முதல்வர் மறைந்தார்! இன்று மாலை இறுதிக்கிரியைகள்!!

(பிரபாகரன் டிலக்சன்)

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வர் – இரண்டாவது குருமகா சந்நிதானம் – ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் நேற்றிரவு முருகனடி சேர்ந்தார்.

கொழும்பில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த நிலையிலேயே நேற்றிரவு 07





# வாக்குறுதிகளை நிறைவேற்ற சிறிது கால அவகாசம் தாருங்கள்

## மக்கள் அலையெனத் திரண்ட காலிமுகத்திடல் மே தினக் கூட்டத்தில் ஜனாதிபதி வேண்டுகோள்

”நாம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற சிறிது கால அவகாசம் தாருங்கள்.” - என்று மக்கள் மற்றும் தொழிற்சங்கங்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க. 06



# அநுர அரசுக்கு சிவப்பு எச்சரிக்கை வழங்க மக்களே அணிதிரளுங்கள்

## தலவாக்கலை மே தினக் கூட்டத்தில் சஜித் அறைகூவல்

“எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்களித்து, அரசுக்கு சிவப்பு எச்சரிக்கையை வழங்குவதற்கு மக்கள் அணிதிரள வேண்டும்.”

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அறைகூவல் விடுத்தார். 07








நேற்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரனின் மே தின உரையின் சீற்றத்தைப் பார்த்தபோது கடந்த பொதுத்தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட சமயம் ஒரு மூத்த அரசியல் நண்பர் ஒருவர் கூறிய விடயம் எனக்கு நினைவுக்கு வந்தது.

அவர் சுமந்திரனுக்கு மிகவும் தெரிந்தவர். சுமந்திரனின் ஆதரவாளரும் கூட. பொதுத் தேர்தலில் இம்முறை சுமந்திரன் நாடாளுமன்றுக்குத் தெரிவாகவில்லை என்ற விடயத்தை ஒட்டி என்னோடு அவர் உரையாடினார். அப்போது அவர் ஒரு விடயத்தைச் சொன்னார்.

“எல்லாம் நல்லதுக்குத் தான்டா. உனக்குத் தெரியுமோ தெரியவில்லை, 1975 – 1976 இல் தமிழர் விடுதலைக் கூட்டணி தனித் தமிழீழம் என்ற தீவிர நிலைப்பாட்டை 07






# காலிமுகத்திடலில் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்டத்தில் இலட்சக்கணக்கான மக்கள் பங்கேற்பு

















# காலிமுகத்திடலில் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்டத்தில் இலட்சக்கணக்கான மக்கள் பங்கேற்பு














# தலவாக்கலையில் நடைபெற்ற சஜித் அணியினரின் மே தினக் கூட்டத்தில் பெருந்திரளானோர் பங்கேற்பு














# தலவாக்கலையில் நடைபெற்ற சஜித் அணியினரின் மே தினக் கூட்டத்தில் பெருந்திரளானோர் பங்கேற்பு









# தெதுரு ஓயாவில் நீராடச் சென்ற இருவர் மாயம்!

(க.மகாதேவன்)

தெதுரு ஓயாவில் நேற்றுப் பிற்பகல் நீராடச் சென்ற ஐந்து பேர் நீரில் இழுத்துச் சென்றிருந்த நிலையில், அவர்களில் இருவர் காணாமல் போயுள்ளனர்.

பிற்பகல் 3.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நீரில் இழுத்துச் சென்றிருந்தவர்களில் மூன்று பேர் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

காணாமல்போன இருவரும் கண்டி பகுதியில் உள்ள பல்பொருள் அங்காடியில் பணிபுரியும் 20 மற்றும் 22 வயதுடைய இளைஞர்கள் ஆவர்.

காப்பாற்றப்பட்ட மூவரும் இளம் யுவதிகள் எனவும், அதே பல்பொருள் அங்காடியில் பணிபுரிபவர்கள் எனவும் தெரியவருகின்றது.

காணாமல்போனவர்களைத் தேடுவதற்காகப் பிரதேச மக்கள் படகுகளைப் பயன்படுத்தி நடவடிக்கையைத் தொடங்கிய போதிலும், மாலை வரை கண்டுபிடிக்கப்படவில்லை.

தொழிலாளர் தினத்தை முன்னிட்டு பல்பொருள் அங்காடியை மூடிவிட்ட அதன் உரிமையாளரும் ஊழியர்களும் இந்தச் சுற்றுலாப் பயணத்தை மேற்கொண்டிருந்தனர்.

இவர்கள் முதலில் சிலாபம் கடற்கரைக்குச் சென்றதோடு, பின்னர் இந்தக் குழு தெதுரு ஓயாவுக்குச் சென்றுள்ளது.

இந்தக் குழு இரண்டு மணி நேரத்துக்கும் மேலாக நீராடியுள்ளது என்று தெரியவந்துள்ளது.

# இளைஞர் படுகொலை! சடலம் தீ வைத்து எரிப்பு!!

## இரண்டு சந்தேகநபர்கள் கைது

இளைஞர் ஒருவரைக் கூரிய ஆயுதத்தால் தாக்கிக் கொலை செய்துவிட்டு சடலத்தை தீ வைத்து எரித்தனர் எனக் கூறப்படும் இரண்டு சந்தேகநபர்கள் கல்கிசை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் கல்கிசை – ஹுலுதாகொட பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

/ஹலுதாகொட பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றில் இளைஞர் ஒருவர் சடலமாகக் காணப்படுகின்றார் என்று பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உயிரிழந்தவர் இரத்மலானை, மஹிந்தாராமை பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞர் ஆவார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கல்கிசை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**வாக்குறுதிகளை...**

கொழும்பு – காலிமுகத்திடலில் நேற்று நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இலட்சக்கணக்கான மக்கள் பங்கேற்ற இந்த மே தினக் கூட்டத்தில் ஜனாதிபதி மேலும் உரையாற்றுகையில்,

“நாட்டில் தற்போது ஒரே அரசியல் சக்தியாக தேசிய மக்கள் சக்தி மட்டுமே உள்ளது. நாட்டின் எதிர்காலமும் அதன் மக்களும் தேசிய மக்கள் சக்தியையே நம்பியுள்ளனர். தேசிய மக்கள் கட்சிக்கு வெளியே எந்தச் சவாலும் இல்லை. அந்தச் சவால் தேசிய மக்கள் சக்தி கட்சிக்குள்ளேயே உள்ளது. முரண்பாடுகளை எதிர்கொள்வதும் புதிய சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாறிக்கொள்வதும் நமது சவால்.

ஆறு மாதங்களுக்குள் யாரும் விளைவுகளை எதிர்பார்க்க முடியாது. சரியான திட்டத்துடன் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு அரசு வலுவான அடித்தளத்தை அமைத்துள்ளது. எனவே, தொழிற்சங்கங்கள் தங்கள் பழைய மனப்பான்மைகளை கைவிட்டு, நாட்டைக் கட்டியெழுப்பும் முயற்சியில் அரசுடன் இணைய வேண்டும். அற்ப விடயங்களுக்காகப் போராட வேண்டாம்.

ஓர் அரசியல் சக்தியாக அரசமைப்பு, வர்த்தமானிகள், சுற்றறிக்கைகள் மூலம் எமக்குக் கிடைத்த சலுகைகளை விட்டுக் கொடுத்துள்ளோம். நாம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற சிறிது கால அவகாசம் தாருங்கள்.” – என்றார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**இரகசியம் பரகசியம்...**

நோக்கி நகர்ந்தது. அச்சமயத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியில் முக்கியஸ்தர்களாக இருந்த அமிர்தலிங்கமும் சிவசிதம்பரமும் நாடாளுமன்றுக்குத் தெரிவு செய்யப்படாமல் தோற்கடிக்கப்பட்டிருந்தனர். அந்தத் தோல்வியின் ஆக்ரோஷமே தமிழர் விடுதலைக் கூட்டணியைத் தனி நாடு கோரிக்கையை நோக்கித் துணிச்சலான முடிவை எடுக்கும் திசையில் அமிர்தலிங்கத்தையும் சிவசிதம்பரத்தையும் வழிநடத்தச் செய்தன என்று பலரும் பேசினர். இப்போதும் சுமந்திரன் நாடாளுமன்றுக்கு வெளியே தள்ளப்பட்டிருப்பது தமிழரசின் பாதையைச் செப்பனிட உதவும் என்று நினைக்கிறேன்." – என்றார் அந்த நண்பர்.

சுமந்திரனின் நேற்றைய அறிவிப்பு சிறிய விடயம் அல்ல. ஐம்பது ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் ஒரு தீவிரப் போக்கின் வெளிப்பாடு. தேர்தலுக்காக வாய்ச்சவடால் விடும் விவகாரமும் அல்ல. சட்ட விற்பன்னரான அவருக்கு தம்முடைய வார்த்தைகளின் ஆழம் நிச்சயம் புரிந்து இருக்கும்.

யுத்த தோல்வியில் தமிழர்கள் இன்று துவண்டு இருக்கின்றார்கள். அவர்களிடம் இருக்கும் ஒரே போராட்ட மார்க்கம் அகிம்சைதான். அகிம்சை மட்டும்தான். அதை பல அரசியல் தலைவர்களும் வாய்ச்சவடாலுக்கு பயன்படுத்திக் கொண்டிருக்க, அதே பாணியில் அறிவிப்பு ஒன்றைக் கொடுத்திருக்கின்றார் சுமந்திரன்.

தமிழ் மக்களின் காணியைப் பறிக்கும் வர்த்தமானி அறிவித்தல் குறித்து சீற்றம் கொண்டுள்ள அவர், நாட்டின் ஜனாதிபதியை நோக்கி இப்படி நமது மக்களின் காணிகளை சூறையாடுவீர்களாயின் யாழ் மண்ணுக்கு – வடக்குக்கு – இனிமேல் நீங்கள் வராமல் பண்ணுவோம், இங்கே காலடி எடுத்து வைக்க முடியாமல் செய்வோம் என்று பகிரங்கமாக எச்சரிக்கை விட்டு சூளுரைக்கும் நிலைக்குச் சென்றிருக்கிறார்.

தலைவர் பிரபாகரனும் நீண்ட பல வருடங்கள் தமிழர் தாயகத்தில் சிங்கள ஆக்கிரமிப்புத் தரப்புகள் காலடி வைக்காமல் தாயகத்தை காபந்து பண்ணி வைத்திருந்தார் என்பது வேறு விடயம். அது ஆயுத ரீதியான போராட்டத்தின் வெற்றிப் பெறுபேறு. உச்சச் சாதனை.

ஆனால் அஹிம்சைப் போராட்டங்களைப் பெயருக்குக் கூட காத்திரமாக நடத்த முடியாத நிலையில் தமிழ் தேசியக் கட்சிகள் துவண்டு கிடக்கையில், நாட்டின் தலைவரைப் பார்த்து – முப்படைகள் மட்டும் பொலிஸின் தளகர்த்தரை நோக்கி – உங்களை வடக்கு மண்ணில், யாழ்ப்பாணத்தில் காலடி எடுத்து வைக்காமல் பண்ணுவோம் என்று சுமந்திரன் அறிவிப்பது, அஹிம்சை போராட்டத்தின் உச்சக்கட்ட நடவடிக்கையாக முன்னெடுக்கப்பட வேண்டிய – இலகுவில் சாத்தியப்படாத – காரியம்.

இந்த விடயங்களில் அடிக்கடி வாயால் பீற்றிக் கொண்டு திரியும் சைக்கிள் தம்பிகள் கூட சுமந்திரனுக்கு பக்கத்தில் வந்து நிற்பார்களோ தெரியவில்லை. யாரை நம்பி இந்த அறிவிப்புக்களை சுமந்திரன் விடுத்தார் என்று தெரியவில்லை. ஆனால் இத்தகைய அஹிம்சை போராளி – துணிச்சல் வீரர் ஒருவர் – இன்று தமிழினத்திற்கு தேவைப்படுகிறார். இந்த அறிவிப்பின் விளைவுகளை அவர் சந்திக்க வேண்டி இருக்கும். எதிர்கொள்ள வேண்டி நேரும். அதற்கான தயாரிப்புகளில் அவர் இறங்க வேண்டியிருக்கும். அது தவிர்க்க முடியாத கட்டாயமாகலாம்.

தமிழ் தேசியம் பேசும் – வாய் கிழிய அதனை உச்சாடனம் பண்ணும் – எத்தனை தமிழ்த் தலைவர்கள் இவ்விவகாரத்தில் போராட அவருக்கு பக்கத்தில் வருவார்கள்? அல்லது வெளிநாட்டில் இருந்து கொண்டு சமூக ஊடகங்கள் வாயிலாக அலப்பறை பண்ணும் பிரகிருதிகள் யாரேனும் அவருக்கு தோள் கொடுப்பார்களா? அல்லது இன்னும் இரண்டு நல்களில் தேர்தல் பிரசாரம் முடிந்ததும், சுமந்திரனின் மே தின அறிவிப்பு முன்னர் அமிர்தலிங்கம் அறிவித்தமை போல 'அடுத்த மேதினம் தமிழீழத்தில்தான்' என்ற வாய்ப் பேச்சாக அடங்கிப் போகுமா?

எது,எப்படி என்றாலும் சுமந்திரன் தமிழரசுக் கட்சியை அதிர்வுள்ள ஒரு போராட்ட சக்தியாக மீண்டும் மாற்றுவதற்கான முன் முயற்சிகளை ஆரம்பித்திருக்கின்றார் என்று தெரிகின்றது. அதற்கு அவருக்கு பக்கத்தில் யாரேனும் நிற்பார்களா என்பது சந்தேகமே. ஏனெனில் அத்தகைய துணிச்சலான அஹிம்சைப் போராளிகள் அவருக்குப் பக்கத்தில் இன்னமும் தெரியவில்லை. களம் வந்தால் உண்மை தெரியும்.

ஆயினும், தமிழர்களின் நிலங்களைப் பறிக்கும் மேற்படி வர்த்தமானி அறிவித்தல் விடயத்தில் சுமந்திரன் அண்ட்கோ அடங்கி விடப் போவதில்லை என்பது தெரிகிறது. இன்று பகல் சம்பந்தப்பட்ட காணிகளின் உரிமையாளர்களை வெற்றிலைக்கேணியில் பெரிய சட்டத்தரணி குழாமுடன் அவர் சந்திக்க இருக்கிறார். இந்த வர்த்தமானி அறிவித்தலைக் கைவாங்கச் செய்யும் போராட்டத்தை அடுத்து அவரும் அவரது தமிழரசுக் கட்சித் தலைவர் சி.வி.கே.சிவஞானமும் கூட்டாக அறிவிக்கக் கூடும் என்று அவரது கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுவரை காலமும் போராட்ட அரசியல் என்று வாய்ப்பேச்சுக்கும் கதைகளை விடுக்காத சுமந்திரன் இப்போது முதல் தடவையாக காய் நகர்த்தத் தொடங்கி இருக்கிறார். நாட்டின் தலைவரை யாழ்ப்பாணம் வரவிடாமல் அவர் என்ன செய்யப் போகின்றார் என்று தெரியவில்லை.

பார்த்திருப்போம் அவரின் திட்டங்களை.

**அநுர அரசுக்கு...**

தலவாக்கலையில் நேற்று நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இந்த அறைகூவலை விடுத்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், "மின்சாரக் கட்டணம் குறைக்கப்படும் என அநுர அரசு உறுதியளித்திருந்தது. ஆனால், தேர்தல் முடிந்த பின்னர் மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்படவுள்ளது என எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. மின்சாரக் கட்டணத்தை 33 சதவீதம் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறியவர்கள், இன்று மக்களை ஏமாற்றுகின்றனர்.

எனவே, இந்த அரசுக்குச் சிவப்பு எச்சரிக்கையை விடுப்பதற்காக, உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியை மக்கள் ஆதரிக்க வேண்டும்.

மக்களை எல்லா வழிகளிலும் ஏமாற்றி வரும் இந்த அரசுக்கு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பாடம் கற்பிக்க வேண்டும். நாட்டு மக்களுக்கு உப்பைக்கூடப் பெற்றுக் கொடுக்க முடியாதவர்களே ஆட்சிப் பீடத்தில் உள்ளனர்.

நாட்டில் சட்டம், ஒழுங்கு அமுலில் இல்லை. பாதாளக் குழுக்கள் சட்டத்தைக் கையிலெடுத்துள்ளன. வீட்டுக்குள்ளும், நடுத்தெருவிலும் கொலைகள் இடம்பெறுகின்றன. நீதிமன்றத்துக்குள்கூட துப்பாக்கிச்சூடு நடத்தப்படும் நிலைமை காணப்படுகின்றது. காட்டாட்சியே நாட்டில் நிலவுகின்றது." – என்றார்.

---

**நல்லை ஆதீன...**

9.45 மணியளவில் அவர் தேகவியோகமானார். அவரது இறுதிக்கிரியைகள் இன்று மாலையே நடைபெறவுள்ளன.

சுகவீனம் காரணமாக ஓரிரு தினங்களுக்கு முன்னர் கொழும்பு சென்றிருந்த அவர் கொழும்பில் வெள்ளவத்தையில் கம்பன் கோட்டத்தில் தங்கியிருந்து தனியார் வைத்தியசாலையில் உடற்பரிசோதனைகளுக்காகச் சென்றிருந்தார்.

இன்று பரிசோதனை முடிவுகளுடன் தனியார் வைத்தியசாலையில் மருத்துவ சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட இருந்த நிலையில், நேற்று இரவு திடீரென இருதயத் தாக்குதலுக்குள்ளான அவர் சற்றுநேரத்திலேயே காலமானார்.

தமக்கு ஏதும் நேர்ந்தால் தம்மைச் சமாதி வைக்க வேண்டாம் என்றும், காலதாமதமின்றிச் செம்மணி மயானத்தில் தம் பூதவுடலை சைவ முறைப்படி நீறாக்கும்படியும் அவர் கலாநிதி ஆறு. திருமுருகன் மற்றும் ரிஷி தொண்டு நாதன் சுவாமிகள் போன்றோருக்கு எழுத்தில் முற்கூட்டியே அறிவுறுத்தி இருந்தார் என்றும் தெரியவருகின்றது. அதன்படி அவரது பூதவுடல் இன்று மாலையே சைவ முறைப்படி தீயுடன் சங்கமிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**சஜித்தின்...**

ஜனாதிபதியாக நினைப்பவர்கள் என்ன நினைப்பார்கள் என்று எண்ணத் தோன்றுகின்றது. ஆகவே, ஜனாதிபதியாக வேண்டும் என்ற சிந்தனையில் உள்ளவர்கள் அந்தச் சிந்தனையைத் திருத்தம் செய்துகொள்ள வேண்டும்.”

– இவ்வாறு பிரதமர் கலாநிதி ஹறிணி அமரசூரிய தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்டம் நேற்று கொழும்பு – காலிமுகத் திடலில் நடைபெற்றது. இதன்போது உரையாற்றுகையிலேயே பிரதமர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், “காலிமுகத்திடல் இம்முறை மே தினக் கூட்டத்தால் பெருமையடைந்துள்ளது.

2025ஆம் ஆண்டு ஆட்சி அதிகாரத்துடன் மே தினக் கூட்டத்தை நடத்துவோம் என்று கடந்த முறை மக்களுக்கு வாக்குறுதி அளித்தோம். அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றியுள்ளோம்.

ஏனைய அரசியல் கட்சிகளின் மே தினக் கூட்டத்துக்கும் எமது மே தினக் கூட்டத்துக்கும் இடையில் பரஸ்பர வேறுபாடுகள் காணப்படுகின்றது. பாரிய போராட்டத்துக்கு மத்தியில் ஆட்சியைக் கைப்பற்றினோம். போராட்டத்தைக் கொண்டாடும் வகையில் இம்முறை மே தினக் கூட்டம் அமைந்துள்ளது.

எமது மக்கள் அலையைக் கண்டு எதிர்வரும் ஆகஸ்ட் மற்றும் டிசம்பர் மாதமளவில் ஜனாதிபதியாக நினைப்பவர்கள் என்ன நினைப்பார்கள் என்று எண்ணத் தோன்றுகின்றது. ஆகவே, ஜனாதிபதியாக வேண்டும் என்ற சிந்தனையில் உள்ளவர்கள் அந்தச் சிந்தனையைத் திருத்தம் செய்துகொள்ள வேண்டும்.

உழைக்கும் வர்க்கத்தினர் எமது வெற்றியின் பிரதான பங்காளர்கள் என்பதை ஒருபோதும் மறக்கப் போவதில்லை. மக்கள் எமக்கு வழங்கிய ஆணைக்கு அமைவாகவே செயற்படுவோம். எதிர்காலம் குறித்து அரசிடம் பாரிய திட்டங்கள் உள்ளன. சிறந்த நாட்டையே நாங்கள் எதிர்கால தலைமுறையினரிடம் ஒப்படைப்போம்.” – என்றார்.




# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## செருப்படி கொடுப்போம்!

வடக்கு மாகாணத்தில் மருதங்கேணி முதல் முள்ளிவாய்க்கால் வரை யாழ்ப்பாணம் மாவட்டம், கிளிநொச்சி மாவட்டம், முல்லைத்தீவு மாவட்டம் ஆகியவற்றின் பெரும்பாலும் கடற்கரையோரப் பிரதேசங்களை அண்டி, 5 ஆயிரத்து 940 ஏக்கர் நிலம் அரச உடமையாக்கப்படுவதற்கான வர்த்தமானி அறிவித்தல் காணி ஆணையாளர் நாயகத்தால் சத்தம் சந்தடியின்றி வெளியிடப்பட்டுள்ளது.

2025.03.28 ஆம் திகதிய 5620 இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலமே இந்த அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது என்று இப்போது தெரியவந்துள்ளது.

யுத்தத்தின் பெயரால் அரசுப் படைகள் பொதுமக்களிடமிருந்து கபளீகரம் பண்ணிய பெருமளவு காணிகள் இன்னமும் இராணுவ ஆக்கிரமிப்பிலேயே உள்ளன.

அவற்றை விடுவிப்போம் என்று தமிழ் மக்களுக்கு தேர்தல் காலங்களில் கயிறு கொடுத்து - வாக்குறுதி அளித்து - அதிகாரத்துக்கு வந்த ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவும் அவரது அரசினரும் இப்போது இருக்கின்ற மக்களின் காணிகளையும் பிடுங்குகின்ற வேலையை - தங்களின் பௌத்த, சிங்கள மேலாண்மைக் கைவரிசையைக் காட்ட - ஆரம்பித்து விட்டார்கள்.

காணி நிர்வாகச் சட்டத்தின் கீழ், பாவனையில் இல்லாத - உரிமை கோரப்படாத - பொது மக்களின் காணிகளைச் சுவீகரிக்கும் அதிகாரம் சட்டரீதியாக அரசுக்கு இருக்குமாயினும் தமிழர் தேசத்தில் சர்ச்சைக்குரிய காணி விடயத்தில் இவ்வாறு ஆக்கிரமிப்பு நடவடிக்கையை அரசு திடுதிப்பென முன்னெடுப்பது மிகப்பெரிய தவறு. மிகக் கீழ்த் தரமான வேலை.

'மரத்தால் விழுந்தவனை மாடு ஏறி மிதிப்பது போல' யுத்தத்தில் துவண்டு போனதமிழர்தாயகத்தைமேலும்சின்னாபின்னமாக்கும் நாசகார நடவடிக்கை இது.

யுத்தத்தின் காரணமாக மக்கள் இடம் பெயர்ந்து இருக்கின்றனர். பூமிப் பந்தெங்கும் சிதறுண்டுள்ளனர். பலர் காணாமல் ஆக்கப்பட்டிருக்கின்றனர். உயிரிழந்த பலரின் வாரிசுகள் இன்னமும் பராயமடையால் சிறுவர்களாக இருக்கிறார்கள். வெளிநாடுகளில் சிதறி வாழுகிறார்கள். பலரின் ஆவணங்கள் யுத்தத்தின் காரணமாக அழிந்திருக்கின்றன. இந்தச் சமயத்தைப் பயன்படுத்தி மூன்று மாதங்களுக்குள் ஆதாரங்களோடு உரித்து கோரப்படாத நிலங்களை அரசு சுவீகரிக்கும் என்ற அடிப்படையில் திடீரென ஆக்கிரமிக்க - பிடுங்க - முயற்சிப்பது மிக கேவலமான செயலாகும்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் மக்கள் குறித்து விசாரணை நடத்த இந்த அரசு தயார் இல்லை. உண்மையை வெளிப்படுத்தி, நீதியை நிலைநாட்டி, பொறுப்புக் கூறலை நடைமுறைப்படுத்த இந்த அரசுக்குத் திராணி இல்லை. மக்களுக்கு யுத்தினால் ஏற்பட்டபேரிழப்புகளுக்கு இழப்பீடு கொடுக்க இந்த அரசுக்கு வசதி இல்லை, எண்ணமும் இல்லை. தமிழ் மக்களுக்கு எதிராகக் கொடூரமாகப் புரியப்பட்ட யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் குறித்து விசாரிக்க இந்த ஆட்சிப் பீடம் தயாராக இல்லை. ஆனால் மக்கள் பாவனையில் இல்லாத நிலங்கள் என்ற பெயரில் தமிழர் தாயக மண்ணை அடித்துப் பறிப்பதில் மாத்திரம் இவ்வளவு தீவிரமும் முனைப்பும் வேகமும் தந்திரமும் ஒன்று சேர இருக்கின்றன.

அடுத்த நான்கு நாள்களில் வருகின்ற சந்தர்ப்பத்தை வசமாகப் பயன்படுத்தி, இந்த அரசுக்கு - இந்த ஆட்சியாளர்களுக்கு - வாக்குச்சீட்டு மூலம் சரியான செருப்படி மக்கள் கொடுத்தால் மாத்திரமே இந்த கொடுங்கோல் முயற்சிக்கு ஆரம்பத்திலேயே சரியான - செம - பாடம் படிப்பித்ததாக அது அமையும். செய்வார்களா நம் தமிழ் மக்கள்?







# அனைத்து குற்றச்சாட்டுகளிலிருந்தும் மஹிந்த ராஜபக்ஷ விடுவிக்கப்படுவார்

## பொதுஜன பெரமுனவின் மே தினக் கூட்டத்தில் நாமல் சவால்

மொட்டுக் கட்சியின் தற்போதைய போக்கைக் கண்டு அரசாங்கம் பயந்தாலும், தனது கட்சி ஜனாதிபதியைக் கண்டு பயப்படவில்லை எனக் கட்சியின் தேசிய அமைப்பாளர், நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக் ஷ தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மே தினக் கூட்டம் நேற்று நுகேகொடையில் உள்ள ஆனந்த சமரகோன் திறந்தவெளி அரங்கில் நாமல் ராஜபக் ஷ தலைமையில் நடைபெற்றது.

இதன் போது உரையாற்றிய நாமல் ராஜபக்ச, தற்போதைய அரசாங்கத்தின் கீழேயே ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷ அனைத்து குற்றச்சாட்டுகளிலிருந்தும் விடுவிக்கப்படுவார் என்றும் கூறினார்.

“நாங்கள் ஏமாற்றுதலை சகித்துக் கொண்டோம் – இப்போது எழுந்து நிற்போம்“ என்ற கருப்பொருளைக் கொண்ட பேரணியில் சி.பி. ரத்நாயக்க மற்றும் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பங்கேற்றனர்.

















# பிரதமர் மோடி ஜம்மு காஷ்மீரில் அமைதியை நிலைநாட்டுவார்

## நடிகர் ரஜினிகாந்த் தெரிவிப்பு

"பஹல்காம் தாக்குதல் காட்டுமிராண்டித்தனமானது, இரக்கமில்லாதது. பிரதமர் மோடி ஜம்மு காஷ்மீரில் அமைதியை கொண்டுவரும் போராளி."

– இவ்வாறு நடிகர் ரஜினிகாந்த் தெரிவித்துள்ளார்.

மும்பையில் நடந்த சர்வதேச ஆடியோ விஷுவல் மற்றும் எண்டர்டெயின்மெண்ட் உச்சி மாநாடு - 2025 இல் கலந்து கொண்ட ரஜினி மேற்கண்டவாறு தெரிவித்தார். மாநாட்டில் அவர் மேலும் உரையாற்றுகையில்,

"பஹல்காமில் நடந்த காட்டுமிராண்டித்தனமான இரக்கமற்றத் தாக்குதலுக்கு பின்னர், இந்த நிகழ்வின் பொருள் பொழுதுபோக்கு என்பதால் தேவையற்ற விமர்சனங்களைத் தவிர்க்க, அரசு இந்த நிகழ்ச்சியைத் தள்ளிவைக்கும் என்று பலர் என்னிடம் தெரிவித்தனர். ஆனால் இந்த நிகழ்வு நடக்கும் என்று நான் உறுதியுடன் இருந்தேன். ஏனெனில் நமது பிரதமர் நரேந்திர மோடி மீது எனக்கு நம்பிக்கை உள்ளது.

அவர் ஒரு போராளி, எந்தச் சூழ்நிலையையும் அவர் எதிர்கொள்ளுவார், கடந்த பத்தாண்டுகளாக எந்தச் சூழ்நிலைகளையும் அவர் திறமையாகவும் அழகாகவும் கையாண்டுள்ளார். அவர், காஷ்மீரில் அமைதியையும் நாட்டுக்கு பெருமையையும் கொண்டுவருவார்.

நான் இங்கு இருப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த WAVES இல் ஒரு பகுதியாக இருப்பது எனது பாக்கியம். மத்திய அரசுக்கு எனது பாராட்டுக்கள்." என தெரிவித்தார்.

# மதுரை சென்றார் த.வெ.க. தலைவர் விஜய் விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு





கொடைக்கானலில் நடைபெறும் புதிய படத்தின் படப்பிடிப்புக்காக மதுரை விமான நிலையம் சென்ற த.வெ.க. தலைவர் விஜய்யை காண சென்ற ஏராளமான தொண்டர்களும், ரசிகர்களும் அவருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலில் நடக்கும் 'ஜனநாயகன்' படப்பிடிப்பில் நடிகர் விஜய் கலந்துகொள்கிறார். இதற்காக சென்னையில் இருந்து அவர் விமானம் மூலம் மதுரை சென்றபோது விஜய்யை பார்க்க, காலை முதலே அவரது கட்சியினர், ரசிகர்கள் மதுரை விமான நிலைய பகுதியில் திரண்டனர். அவர்கள் விமான நிலையத்திற்குள் நுழைய முயன்றனர். தடுப்பு வேலிகளை அமைத்து பொலிஸார் அவர்களை தடுத்து அங்கிருந்து அப்புறப்படுத்தினர்.

இந்நிலையில் மதியம் 2 மணிக்கு மேல் மீண்டும் விமான நிலைய பகுதியில் த.வெ.கவினர், ரசிகர்கள் கூடினர். அவர்கள் விமான நிலைய முன்பகுதிக்கு செல்ல முண்டியடித்தனர். பொலிஸார் அவர்களை தடுத்து நிறுத்திய நிலையில், குறிப்பிட்ட நிர்வாகிகள் மட்டும் விமான நிலையத்திற்குள் அனுமதிக்கப்பட்டனர். மற்றவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. இதன் காரணமாக விமான நிலையத்திற்கு வெளியில் பெருங்குடி அம்பேத்கர் சிலை வரையிலும் சாலைகளில் விஜய் ரசிகர்கள் காத்திருந்தனர்.

பின்னர் மாலை 4 மணிக்கு விஜய் விமான நிலையத்துக்கு சென்றார். அவரை பார்க்க வெளியே காத்திருந்த தொண்டர்கள், ரசிகர்கள் விமான நிலைய முன் பகுதியை நோக்கி சென்றனர். தடுப்புகளை தள்ளி விட்டும், தடுப்பு வேலிகளை சேதப்படுத்தியும், சுவர்களில் ஏறி குதித்தும் உள்ளே புகுந்தனர். தடுக்க முயன்ற பொலிஸாருக்கும், தொண்டர்களுக்கும் இடையே வாக்குவாதமும், தள்ளுமுள்ளும் ஏற்பட்டது.

விமான நிலையத்தைவிட்டு வெளியே சென்ற விஜய், திறந்த பிரசார வானில் ஏறி தொண்டர்கள், ரசிகர்களை பார்த்து கையை அசைத்தும், கரங்களைக் கூப்பி வணக்கம் செலுத்தியும் உற்சாகப்படுத்தினர். அப்போது கட்சி நிர்வாகிகளும், தொண்டர்களும் பூக்களை தூவியும், கோஷமிட்டும் விஜய்யை வரவேற்றனர்.










# இஸ்ரேல் காட்டுத்தீயால் 13 பேர் காயம் தேசிய அவசரகால நிலை பிரகடனம்

இஸ்ரேலில் உள்ள வனப்பகுதியில் பாரிய தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காட்டுத்தீயினால் குறைந்தது 13 பேர் காயமடைந்துள்ளனர்.

உயிரிழப்புகள் தொடர்பில் இதுவரை எந்தத் தகவலும் வெளியாகவில்லை.

தீப்பரவல் ஏற்பட்டுள்ள பகுதியில் வசிக்கும் குடியிருப்பாளர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

தீயணைப்பு வாகனங்கள், ஹெலிக்கொப்டர் என்பன தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன.

அந்தப் பகுதியில் உள்ள பல வீதிகளும் மூடப்பட்டுள்ளன.

இதேவேளை, இஸ்ரேலில் தேசிய அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

10 ஆண்டுகளின் பின் இஸ்ரேலில் பாரிய காட்டுத்தீ ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.















# ரஷ்யா - வடகொரியாவிற்கான பாலத்துக்கான பணி ஆரம்பம்

ரஷ்யாவையும், வடகொரியாவையும் இணைக்கும் புதிய பாலத்தை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இது இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் முக்கிய வளர்ச்சியை குறிப்பதாக வட கொரியா அறிவித்துள்ளது.

இந்த பாலத்தை நிர்மாணிப்பது தொடர்பான கலந்துரையாடல்கள் கடந்த பல வருடங்களாக இடம்பெற்றன.

எனினும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், கடந்த ஆண்டு வட கொரியாவுக்கு விஜயம் மேற்கொண்ட போது இதற்கான இறுதி இணக்கப்பாடு எட்டப்பட்டது.

உக்ரைன் போருக்காக ஆயுதங்களை வழங்கி அதற்கு மாற்றீடாக வட கொரியா, பொருளாதார மற்றும் இராணுவ நன்மைகளைப் பெறுவதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.





# தென் கொரிய ஜனாதிபதி ஹான் டக் சூ பதவி விலகல்


தென் கொரியாவின் இடைக்கால ஜனாதிபதி ஹான் டக் சூ பதவி விலகியுள்ளார்.

அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் அவர் போட்டியிடத் திட்டமிட்டுள்ளார் என சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

அந்நாட்டின் தேர்தல் விதிமுறைகளை பின்பற்றி அவர் பதவி விலகுவதாக அறிவித்துள்ளார்.



# ரணிலின் பிரதான பாதுகாப்பு அதிகாரி 23 வருடங்களின் பின் திடீர் இடமாற்றம்



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பிரதான பாதுகாப்பு அதிகாரியான பொலிஸ் பரிசோதகர் அசோக்க ஆரியவன்ச உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் யாழ். காங்கேசன்துறைக்குப் பணி இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் பரிசோதகர் அசோக்க ஆரியவன்ச நேற்று வியாழக்கிழமை முதல் அமுலுக்கு வரும் வகையில் பொலிஸ் தலைமையகத்தால் பணி இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் பரிசோதகர் அசோக்க ஆரியவன்ச, ரணில் விக்கிரமசிங்கவின் பாதுகாப்புப் பிரிவில் 23 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.

இவர் ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட பாதுகாப்பு அதிகாரியாக 15 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.

இந்தப் பணி இடமாற்றத்துக்கான உத்தியோகபூர்வ காரணம் இதுவரை வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# பஸ் கட்டணத்தில் மாற்றம் இல்லை; தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

எரிபொருள் விலைகள் குறைக்கப்பட்டுள்ள போதிலும் பஸ் கட்டணத்தில் எவ்வித திருத்தமும் மேற்கொள்ளப்படாது என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னர் பஸ் கட்டணம் திருத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் காணப்பட்ட எரிபொருள் விலை மற்றும் தற்போதைய விலைக்கு இடையிலான வேறுபாடு கணக்கிடப்பட்டதாக ஆணைக்குழுவின் பதில் பணிப்பாளர் நாயகம் நயோமி ஜயவர்தன தெரிவித்தார்.

விலையில் ஏற்பட்ட வேறுபாடு 4 வீதத்தை விட குறைவாக உள்ளதால் கட்டணத் திருத்தத்தை மேற்கொள்ளாதிருக்க தீர்மானித்ததாக அவர் குறிப்பிட்டார்.



# சிறுவர்கள் மத்தியில் அதிகரிக்கும் இன்புளுவென்ஸா வைரஸ் தொற்று



மழையுடனான வானிலையை அடுத்து சிறுவர்கள் மத்தியில் இன்புளுவென்ஸா வைரஸ் தொற்று பரவல் அதிகரித்துள்ளதாக கொழும்பு சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

காய்ச்சல், இருமல், வாந்தி மற்றும் தடிமன் உள்ளிட்டவை இதற்கான அறிகுறிகள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இன்புளுவென்ஸா A மற்றும் இன்புளுவென்ஸா ஙீ வைரஸ் பரவல் இந்த காலப்பகுதியில் அவதானிக்கப்பட்டுள்ளன.

அவற்றில் குளிர்ச்சியான நாடுகளில் காணப்படும் இன்புளுவென்ஸா யு வைரஸ் தொற்று அதிகளவில் இனங்காணப்பட்டுள்ளது.

இந்த வைரஸ் தொற்று ஏனையோருக்கு பரவும் அபாயம் காணப்படுவதால் தொற்று இனங்காணப்பட்ட நபர் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

நோய் அறிகுறி தென்பட்டால் அருகில் உள்ள வைத்தியரை உடனடியாக நாடுமாறும் அவர் கோரியுள்ளார்.

வைரஸ் தொற்று பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக கைகளை கழுவி சுத்தமாக வைத்திருக்க வேண்டும் எனக் கொழும்பு சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

# நாகையிலிருந்து காங்கேசன் துறைமுகத்துக்கு ஜூலை 15 இல் சரக்கு கப்பல் போக்குவரத்து

## போக்குவரத்து நிறுவன தலைவர் சுந்தர்ராஜன் தகவல்

மே 2 ஆவது வாரத்தில் 2 ஆவது பயணிகள் கப்பல் போக்குவரத்து தொடங்கப்பட உள்ளது.

நாகையில் இருந்து இலங்கை காங்கேசன் துறைமுகத்துக்கு பயணிகள் கப்பல் போக்குவரத்து தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இதனை தனியார் கப்பல் போக்குவரத்து நிறுவனமான சுபம் கப்பல் நிறுவனம் இயக்கி வருகிறது.

இந்த நிலையில், சுற்றுலாப் பயணிகளை கவரும் நோக்கில் பயண கட்டணத்தை குறைத்து அந்நிறுவனம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து பயணிகள் கப்பல் நிறுவன தலைவர் சுந்தர்ராஜன் நாகையில் செய்தியாளர்களை சந்தித்தார், அப்போது அவர் கருத்து தெரிவிக்கையில்,

"கடந்த ஆண்டு ஓகஸ்ட் 16 ஆம் திகதி முதல் நாகையில் இருந்து இலங்கை காங்கேசன் துறைமுகத்துக்கு கப்பல் போக்குவரத்து இயக்கப்பட்டு வருகிறது. இதற்கு பயணிகளிடையே நல்ல வரவேற்பு இருந்து வருகிறது. இந்த நிலையில் கப்பல் பயணிகளுக்கு உதவிடும் வகையில் தற்போதைய கட்டணமான (இந்திய நாணயத்தில்) 8,500 ரூபாவில் இருந்து



8000 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது. மேலும் பயணிகள் தங்களது உடைமைகளாக 10 கிலோ மட்டுமே எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்ட நிலையில், அதனை 7 கிலோ ஹேண்ட் பேக் எடையாகவும், 15 கிலோ செக் இன் எடையாகவும் எடுத்துச் செல்ல அனுமதி வழங்க உள்ளோம்.

இது தவிர 15,000 ரூபாவுக்கு 2 இரவுகள் பயணம் உட்பட மூன்று நாள் கொண்ட சுற்றுலா பேக்கேஜ் திட்டம், 30,000 ரூபாவுக்கு 5 இரவுகள் 6 நாள் கொண்ட சுற்றுலா பேக்கேஜ் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. சுற்றுலா பேக்கேஜ் மூலம் ராமர் பாலத்தை நேரடியாக பார்வையிடவும், அதில் நடந்து செல்லவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த பேக்கேஜ் திட்டத்தில் இருவழி பயண கட்டணம், தங்கும் வசதி, போக்குவரத்து வசதியும் செய்து கொடுக்கப்படும்.

அதேபோல் நாகையில் இருந்து இலங்கை காங்கேசன் துறைமுகத்துக்கு சரக்கு கப்பல் போக்குவரத்து தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தற்போது அதற்கான ஒப்புதல் பெறும் பணி நடைபெற்று வருகிறது. எதிர்வரும் ஜூலை 15 ஆம் திகதியளவில் இந்த சரக்கு கப்பல் போக்குவரத்து தொடங்க வாய்ப்புகள் உள்ளது.

அதுபோல் மே 2 ஆவது வாரத்தில் 2 ஆவது பயணிகள் கப்பல் போக்குவரத்து தொடங்கப்பட உள்ளது. இதில் 250 இருக்கைகளில், 220 எக்கனாமிக் இருக்கைகளும், 20 பிசினஸ் இருக்கைகளும், 10 சூட் ரூம்கள் வசதியும் இருக்கும். வடகிழக்கு பருவமழை காலகட்டங்களில் கப்பல் போக்குவரத்தை நிறுத்தி வைப்பதை வழக்கமாக கொண்டுள்ளோம். ஆனால் இந்த 2 ஆவது கப்பல் போக்குவரத்தானது புயல் சின்னம் உருவாகும் காலத்தை தவிர்த்து, ஆண்டு முழுவதும் மற்ற அனைத்து நாள்களிலும் இயங்கும் வகையுடன் கூடிய தரத்தில் உருவாக்கி வருகிறோம்." என்றார்.

# பெரும்பான்மை கட்சிகளை விடுத்து தமிழர்கள் தனித்துவமான தமிழ் அணிக்கு வாக்களியுங்கள்

## தெமட்டகொடை வட்டார லாந்தர் சின்ன வேட்பாளர் ஸ்டீபன் தெரிவிப்பு

கொழும்பு மாநகர சபைக்கு உட்பட்டு வாழும் தமிழ் மக்களே பெரும்பான்மைகட்சிகளுக்குவாக்களித்துநமது உரிமைகளையும் நமக்கான சலுகைகளையும் வரப்பிரசாதங்களையும் தாரை வார்த்து விடக் கூடாது. மாறாக தனித்துவமான தமிழ் அணியான சுயேச்சைக் குழு நான்கினை வெற்றி பெறச் செய்து எமக்கான உரிமைகளை எமதாக்கிக் கொள்ள முயற்சிக்க வேண்டும் என்று குழுவின் தெமட்ட கொடை வட்டார வேட்பாளர் ஜே.ஜி. ஸ்டீபன் தெரிவித்துள்ளார்.

தெமட்டகொடை வட்டாரத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற பிரசார செயல்பாட்டாளர்களுடனான ஆலோசனைக் கூட்டத்தின் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது,

"வரலாற்றில் முதல் தடவையாக இம்முறை கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் சீரான சிந்தனையில் பரந்த நோக்கம் கொண்டதான தனித்துவமான தனிப்பெரும் தமிழ் அணியாக களமிறங்கியிருக்கும் சுயேச்சை குழு நான்கின் வேட்பாளர்களை வெற்றி பெற செய்ய வைக்க வேண்டியது கொழும்பு வாழ் தமிழ் மக்களின் கடமையும் பொறுப்புமாக அமைந்திருக்கின்றது.

சமூக சிந்தனையாளர் முன்னாள்



மேல் மாகாண சபை உறுப்பினர் கே.ரி. குருசுவாமி மற்றும் சமூக ஆர்வலர், விவேக பயிற்சி நிறுவனத்தின் தலைவர் பழ. புஷ்பநாதன் ஆகியோரின் இணைத் தலைமையில் சுயேச்சைக் குழு நான்கில் இணைந்திருக்கும் அனைவருமே சமூக சேவையாளர்களாகவும்சமூகத்தின்மீதானபற்றும்வாஞ்சையும் கொண்டவர்களாகவும் காணப்படுகின்றனர்.

சுயநலமற்ற சுயேச்சைக் குழு நான்கின் பங்குதாரர்கள் தமிழ் மக்களுக்கு மிகவும் பரிச்சயமானவர்கள். தமிழ் மக்களின்பால் உயர்ந்த எண்ணம் கொண்டு நம்பிக்கையுடன் களம் இறங்கி இருக்கும் சுயேச்சைக் குழு நான்கிலிருந்து சுமார் 15 உறுப்பினர்களை கொழும்பு மாநகர சபைக்கு எமது மக்கள் அனுப்பி வைப்பார்களேயானால் அது கொழும்புவாழ் தமிழ் மக்களுக்கு கிடைத்த பெரு வெற்றியாக மாறிவிடும் என்பதில் ஐயமே இல்லை. அதேபோன்று குறைந்தளவிலான உறுப்பினர்களை கொண்டு எமக்கான இலக்குகளை அடைவதென்பது மிகவும் கடினமானது என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

கொழும்புவாழ் தமிழ் மக்கள் இம்முறை தங்களிடம் வாக்கு கேட்டு வருவோரை நன்கு ஆராய்ந்து பரிசீலித்து பார்க்க வேண்டியது அவசியமாகும். பெரும்பான்மைக் கட்சிகளுக்கு வாக்களித்து எமக்கான உறுப்புரிமைகளையும் அத்துடன் கொழும்பு மாநகர சபையிலிருந்து கிடைக்கப்பெறும் வரப்பிரசாதங்களையும் இல்லாமல் செய்து கொள்வதற்கு நாமே துணையாக இருந்துவிடக் கூடாது என்பதிலும் கவனம் செலுத்த வேண்டும். ஆகவே தேர்தல் பிரசாரங்கள் நிறைவடைந்ததன் பின்னர் எஞ்சியிருக்கும் இரண்டு தினங்களில் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களின் கடந்த கால செயற்பாடுகள் எல்லாவற்றையும் சீர்தூக்கிப் பார்த்து தீர்க்கமாக சிந்தித்து வாக்களிக்குமாறு கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட தமிழ் மக்களிடம் உரிமையுடன் வேண்டுகோளை முன் வைக்கிறேன்." – என்றார்.




இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர்.

இலங்கையில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட சரித்திரத்தின் ஆரம்பத்தில் - எண்பதுகள் வரை - தாயகத்தில் நின்று நம் இனத்துக்காகப் போராடிய புலமையாளர். விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் தியாகி சிவகுமாரன், புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் உமாமகேஸ்வரன், சுந்தரம் சிறிசபாரத்தினம், சித்தார்த்தன் முதல் டக்ளஸ் தேவானந்தா வரை மூத்த போராளித் தலைவர்கள் எல்லோரோடும் சட்டவாளராகவும், தமிழ் மக்களின் புனர்வாழ்வுப் பணிகளை ஒருங்கிணைக்கும் தொடர்பாளராகவும் நெருங்கிப் பழகியவர். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் தமிழர் தகவல் நிலையம் ஆகியவற்றின் பிதாமகர்களில் ஒருவர். இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்கள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட சன்சோனி கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பு வாதங்களையும் சான்றுகளையும் ஒருங்கிணைத்து நெறிப்படுத்தும் அனுசரணை சட்டத்தரணியாகச் செயற்பட்டவர். தற்போதைய நிகழ்வுகள் தொடர்பான அவரது பார்வை அவரது அனுபவங்களிலிருந்து தமிழ் மக்களின் புரிதலுக்காக இங்கு தொடராக வெளிவருகிறது.

ஆஸ்திரேலியாவில் புலம்பெயர் தமிழர்களின் சட்டநலன்களில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்டு வரும் அவர் முன்னர் 'காலைக்கதிர்' நாளிதழின் வாசகர்களால் நன்கு அறியப்பட்ட அரசியல் கட்டுரையாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

12

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?



கலவரத்தின் போது வீதிக் காவலில் இராணுவம்.

1977 இல் கட்சியாகப் பதிவு செய்யப்பட்டு, ஜனநாயக ரீதியில் பயணித்த ஜே.வி.பி. தேர்தல்களில் வெல்வதற்காக முழு பிரயத்தனங்களை மேற்கொண்டாலும், அவர்கள் தொடர்ந்தும் தேர்தல் மோகங்களால் பாதிப்புக்கு உள்ளாகாத சில அடிமட்டக் குழுக்களை இரகசியமாக வளர்த்தும் பேணியும் வந்தனர். போபகே போன்ற மிதவாதிகள் அவற்றை சமுதாய மாற்றத்துக்கான கட்டமைப்புக்களாக விவரித்து, இரகசியமான குழுக்களுக்குத் தேவையில்லை என்று வாதித்தாலும், 1977-இல் அவர்களுடன் வந்து சேர்ந்து, ஆதரவாக நின்றவர்கள் யாவருமே கட்சி கோட்பாடுகளுக்குள் நிற்கவில்லை. சிலர் கடும்போக்குவாதிகளின் தலைமைத்துவத்தில் இப்படியான குழுக்களை ஏற்படுத்தி, இரகசியமாக அவை பாதுகாக்கப்பட்டன.



1983 ஜூலைக் கலவரக் காட்சி.

தேர்தல் கூட்டங்களில் மக்கள் சேர்ந்தமையால் அதில் குதூகலம் கொண்ட விஜயவீர, அவர்கள் எல்லோரையுமே கட்சி விசுவாசிகளாகக் கருதி, அந்த மக்களின் ஆதரவு வாக்குகளில் தேர்தல் மூலம் சமுதாயப் புரட்சியை ஏற்படுத்தி விடுவேன்

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

என்று நம்பினார். அப்படியான நம்பிக்கைகளில் சுகததாஸ அரங்கில் 5 ஏப்ரல் 1982 இல் நடந்த அவர்களது ஏப்ரல் கிளர்ச்சியின் 11 ஆவது ஆண்டு விழாவில் பேசும்போது "லங்கா சமசமாஜக் கட்சியை தற்போது 5 மாவட்டங்களில் ஏனோ தானோ எனக் காணக்கூடியதாக இருக்கிறது. ஆனால் ஜே.வி. பியோ 24 மாவட்டங்களிலும் தயாராக இருக்கிறது. யாழ்ப்பாணத்தில், மட்டக்களப்பில் எங்கும் போட்டியிடுவோம். அடுத்த தேர்தலில் ஜே.வி.பி. மட்டுமே இடதுசாரிகளாகப் போட்டியிடக் கூடிய கட்சியாக இருக்கும். இம்முறை 15 லட்சம் இளைஞர்கள் வாக்காளர்களாகப் பதியப்பட்டுள்ளனர். அவ்வளவு வாக்குகளும் ஜே.வி.பிக்கே!" –என்று பலத்த கரகோஷத்துக்கிடையில் அறிவித்தார். அவ்வளவு எதிர்பார்ப்புக்களையும் தந்த பின்னர் 1982 ஆம் ஆண்டின் ஜனாதிபதி தேர்தலில் விஜயவீர பெற்ற வாக்குகள் இரண்டரை லட்சங்கள் மட்டுமே. கட்சியின் கட்டமைப்புக்களும் தலைவர்களும் கூட தோல்வியை படுமோசமானதாக ஏற்றுக் கொண்டனர்.

ஜனாதிபதித் தேர்தலில் விஜயவீர பங்குபற்றியமை பற்றித் தனது ராஜினாமாக் கடிதத்தில் லயனல் போபகே "எப்படி 1971 இல் ஒரு பிழையான முடிவை எடுத்தேனோ, அதே போன்ற ஒன்றை 1982 இல் எடுத்தேன். இது, தோழர் விஜயவீர ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட நான் தந்த முழுமையான ஆதரவு. எங்கள் கட்சியின் வளர்ச்சிப் பாதையில், அன்று நடந்து கொண்டிருந்த அரசியல் நடப்புகளில், நாம் அவரைத் தேர்தலில் போட்டியிடாது தடுத்திருந்தாலும், இன்றிருக்கும் அரசியல் சூழ்நிலைக்கு மாறாக இருந்திருக்காது. ஆனால் அவரைத் தேர்தலில் நிறுத்தி வைக்கத் தந்த ஆதரவினால் கட்சி இன்று இருக்கும் பரிதாப நிலைக்கு நானும் காரண கர்த்தா என்பதை ஏற்றுக் கொள்கிறேன். நாங்கள் செய்து கொண்டிருந்த அரசியல் பணிகளில் அவரை வேட்பாளராக நியமிப்பதும் தவிர்க்க முடியாததாக இருந்தது." – என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

அந்தத் தோல்வியின் காரணங்களையும், விலகிச் செல்கின்ற ஆதரவாளர்களின் கருத்துக்களையும் உள்வாங்கி, தங்களது அங்கத்தினர்களுக்காக வகுப்புகளில் மேலெழுந்த வாரியாக, முன்னைய வகுப்புகளை சில மாற்றங்களுடன் நடத்தினர். அதில் 'இந்திய விஸ்தரிப்பு' என்ற தலைப்பில் இருந்த வகுப்புகளை நிறுத்தி, 'கட்சியின் சரித்திரம்' என்பதைப் புகுத்தினார்கள். அது, முக்கியமாக விஜயவீரவின் தலைமைப் பாணிகளுக்கு எதிரான கருத்துக்களுக்கு விளக்கம் அளிப்பனவாகவும், கடும் போக்குவாதிகளின் நியாயங்களையும் புதிதாக இணைந்த கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்களுக்கு போதித்தது. கட்சியில் மும்முரம் காட்டி விசுவாசியாக வளரக்கூடிய தன்மைகளை வெளிப்படுத்தியவர்களுக்கு ஒரு கிழமையில் இருந்து இரண்டு கிழமை வரையான முகாம்கள் நடத்தப்பட்டு அதில் போதனைகள் தீவிரமாகவும் கடின சூழ்நிலைகளில் பயணிப்பதற்கான வழிவகைகளும் பயிற்றுவிக்கப்பட்டன.

இந்தோனேசியா, சிலி போன்ற நாடுகளில் படைகளால் கம்யூனிஸ்ட் கட்சி அழிக்கப்பட்ட படிப்பினைகளில், 1982இன் தேர்தல் தோல்விகளின் பின் ஜே.வி.பி. ஜனநாயக முறையில் சோசலிஸத்தை நாட்டில் அமைத்து விடலாம் என்ற நம்பிக்கை கொள்ளவில்லை. லயனல் போபகே அது ஒரு தேர்தல்களில் பங்கு பற்றிய பரீட்சார்த்த முயற்சி என்றே பிரசாரப்படுத்தினார். ஆகவே, அவர்கள் எந்த நிலையையும் சமாளிக்க கூடிய குழுக்களுக்குப் பயிற்சிகள் தந்து அவர்களின் சித்தாந்தங்களில் தோய்த்து வளர்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களது பயிற்சி பட்டறைகளின் வகுப்புகளில் கட்சியின் சரித்திரத்தில் விஜயவீரவினதும் அவரோடு இருந்த கடும் போக்காளர்களினதும் இனப் பிரச்சனை தீர்வுகள் வலியுறுத்தப்பட்டு, சிங்கள மக்களின் அபிமானத்தைப் பெற அது முக்கியம் என்பதும் போதிக்கப்பட்டது.

ஜே.ஆர்., தமிழர் விடுதலைக் கூட்டணியினருடன் அதிகாரப் பரவலாக்கங்களுக்காக பிரதேச சபைகள் பற்றி பேச்சுவார்த்தைகளை நடத்திக் கொண்டிருந்தார். அதிகாரப் பரவலை ஜே.வி.பி.



1982 ஜனாதிபதித் தேர்தல் வேட்புமனுத் தாக்கலின் போது...

எதிர்த்து அறிக்கைகள் தந்து கொண்டு இருந்த வேளை. ஈரான் – ஈராக் போரில் ஈரான் சார்பாக மகஜர்கள், துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டு ஜே.வி.பி. ஆர்ப்பாட்டங்களும் நடத்தியது. ஜே.வி. பியின் நடவடிக்கைகளுக்கு மத்திய கிழக்கில் பெட்ரோல் பணம் வருகிறது, அவர்கள் இன்னும் ஒரு கலவரத்தை உருவாக்கலாம் என ஜே.ஆர. கணித்து, அதிகாரப்பரவல்களுக்கான அவர்களது எதிர்ப்பை சாதகமாகவே பயன்படுத்தினார். தான் அதிகாரப் பரவலைத் தர இணங்கினாலும், தமிழர் விரோத – சிங்கள தேசியவாதிகளான ஜே.வி.பி. இணங்கப் போவதில்லை எனவும், அவர்களது ஆதரவையும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் தூபம் போட்டார். தமிழர்களுக்கு எதிரானவர்களில் ஜே.வி.பி. முதன்மைக் கட்சி என்ற வியூகங்களில் ஊடகப் பிரசாரங்கள் அரசாங்கத்திற்காக மேற்கொள்ளப்பட்டன.

தங்களது முதலாளித்துவ பொருளாதாரக் கொள்கைகளுக்கு இவர்களது வளர்ச்சி தடையாக இருக்கும் என்ற கணக்கில், வடக்கில் மேற்கொள்ளக் கையில் இருந்த அதிகாரங்களை பாவித்து, அவர்களை (ஜே.வி.பியினரை) தடை செய்யத் திட்டங்கள் உருவாக்கப்பட்டன. அதற்காக ஜே.வி. பியினர் தமிழ் ஆயுதக் குழுக்களினரோடு தொடர்பு வைத்திருக்கிறார்கள் என்ற பிரசாரமும் அரசியல் மட்டங்களில் உலாவ விடப்பட்டது.


அதேசமயம் அரசாங்கத் திணைக்கணங்கள், அரசு சார்பான தொழிற்சங்கங்கள் சிங்கள பேராண்மை முக்கியஸ்தர்களான என்.கியூ.டயஸ்,

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

காமினி திஸநாயக்க, லலித் அத்துலத் முதலி போன்றவர்கள் வளர்ந்து தொல்லை தரும் தமிழ் விடுதலைக் குழுக்களுக்கு தகுந்த பாடம் படிப்பிக்க வேண்டும் என்றும், அதற்காக நாட்டின் மற்றைய பகுதிகளில் வாழ்ந்த தமிழ் மக்களைப் பகடைக் காய்களாகப் பாவிக்க வேண்டும் என்றும் ஆயத் தங்கள் முன்னெடுத்தனர். தமிழ் மாகாணங்களுக்கு வெளியே வாழும் மக்களின் அல்லோலம் வடகிழக்கு மாகாணத்தில் இருக்கும் ஆதரவை விடுதலைக் குழுக்களுக்குக் குறைக்கும் என்பது அவர்களது திட்டங்களை நிலைகுலைய வைக்க, நிலையற்றதும் ஸ்திரமற்றதுமான தன்மையை நாட்டில் உண்டாக்க வேண்டும். ஆனால் அவர்களிடம் (ஜே.வி.பியின ரிடம்) புரட்சி ஒன்றை நடத்தக்கூடிய ஆயுதங்கள், இராணுவத்தை அவற்றைக் கொண்டு எதிர்க்கக் கூடிய திராணி போன்றவை இருக்கவில்லை. கத்தி, கடப்பாரை, பொல்லுகள், அலவாங்கு, வாள்கள் போன்றவற்றினால் பீதி கிளப்பக்கூடிய வழிமுறை களையே அவர்கள் பார்த்து, சிங்கள மக்களிடையே வாழும் தமிழ் மக்களை தாக்குவதால் நாடு நிலை குலைந்து, சர்வதேச அழுத்தங்களுக்கு ஆளாகும்




எண்ணம். ஆயினும், விடுதலைக் குழுக்களை ஒரு கை பார்க்க வேண்டும் என்ற வெறியும் இருந்தது. இதனை நடத்தி விட்டு அதன் பழியை சிங்கள மக்க ளின் உணர்ச்சியிலும் ஜே.வி.பி. தமிழ் எதிர்ப்புக் கொள்கையிலும் போட்டு விடலாம் என்று கணக்குப் போட்டார்கள்.

ஜே.வி.பி. தங்களது பிரசுரங்களில் நாட்டைப் பிரித்துத் தமிழ் மக்களுக்கு தமிழீழம் தர ஜே.ஆர்., தொண்டமானுடன் சேர்ந்து நாடகமாடிக்கொண்டு, அதேசமயம் விடுதலைக் குழுக்களை அழிப்பவராக பாசாங்கு செய்கிறார், சிங்களத் தேசியத்தை தனது பொருளாதார நலன்களுக்காக அடகு வைக்க விரும்புகிறார் என்று சிங்கள பேரினவாதத்தை உசுப்பேத்தியது. தமிழர் போராட்டங்களை முறி யடிக்க வேண்டியது ஒவ்வொரு தேச விசுவாசி யினதும் கடமை என மக்களுக்குக் குரல் கொடுத்தது.

நாட்டில் வளரும் முதலாளித்துவ பொருளாதாரத் அதேசமயம், பொருளாதாரத்துக்கு பெரும் பங்கு தந்த தமிழரின் வியாபாரங்களை அழிப்பதால் பொருளாதாரம் பின்னோக்கிச் சென்று, முதலா ளித்துவம் பின்னர் செய்வதறியாது திகைக்கும் என்று கணக்கிடப்பட்டது என இவற்றை ஆராய்ந்த வர்கள் கருதினர். தமிழருக்கு நேர்வதால் விடுதலைக் குழுக்களுக்கு பயமற்ற, தகுந்த பாடம் தந்தவர்கள் தாங்கள்தான் என்று சிங்கள மக்களிடையே தங்கள் அபிமானம் பெருகும் என்றும் எண்ணினார்கள். இதனால் ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை விழுத்தும் எண்ணப் பாங்கும் ஜே.வி.பிக்கு இருந்ததாக ஆய்வாளர்கள் கருதினர்.

இரண்டு பக்கங்களுமே திட்டங்களை உருவாக்கி நகர்ந்த பொழுது, திருநெல்வேலியில் 13 இராணுவ வீரர்கள் விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டமை, தொடர்ந்த அட்டூழியங்களுக்குக் காரணமாக்கப் பட்டது.

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

இந்தக் கலவரங்களுக்கு ஜே.வி.பியும் இடதுசாரி கட்சிகளும் காரணம் எனக் கூறி, அவர்களை – ஜே.வி.பி. உட்பட – தடை செய்யப்பட்டது. தலைவர்கள் லயனல் போபகே உட்பட கைது செய்யப்பட்டார்கள். பிடிபடாதவர்கள் – விஜயவீர உட்பட – பதுங்கிக் கொண்டார்கள். ஜே.வி.பியைத் தடை செய்வதற்கான தகுந்த ஆதாரங்கள் இருக்கவில்லை. கருத்தாளங்களும் சப்பைக் கட்டுகளுமே மிகுந்திருந்தன. அரச திணைக்களங்களின் ஊழியர்களும் ஐக்கிய தேசிய கட்சி தொழிற்சங்க அங்கத்தினர்களுமே அரச படைகளின் பாரா முகத்தில் இந்த நடவடிக்கைகளில் பங்குபற்றினார்கள் என்று கூறி தங்களுக்கு எதிரான ஆதாரங்களை இன்று வரை ஜே.வி.பி. கேட்கிறது. தங்களைத் தடை செய்தது அரசியல் பழிவாங்கல் என்று அறிக்கையையும் வெளியிட்டது. ஆனால் தமிழ் மக்கள் பட்ட அவஸ்தைகளுக்கு, அவர்களுக்கு எதிராக நடத்தப்பட்டவை மனிதாபிமானமற்ற செயல் என கட்சி எந்த அறிக்கையையும் விடவில்லை. அப்படித் தமிழருக்கு சாதகமான அறிக்கை தருவது தங்களைப் பலவீனப்படுத்தி விடுமோ என்ற கருத்தியல் அவர்களிடையே ஓடியது. அரசாங்கத்துக்கு எதிராக எதுவித கிளர்ச்சிகளுமின்றி, அன்றில் தடை செய்யப்படாத அவர்களுக்கு ஆதரவான தொழிற்சங்கங்களையும் நடவடிக்கைகளுக்குத் தூண்டாமல், இவை ஆயுதம் தாங்கிய தமிழ்ப் போராளிகளால் வந்த விளைவு என்ற பிம்பத்தையே சிங்கள மக்களிடையே வளர்த்து, பிரிவினைக்கோ அதிகாரப் பரவலுக்கோ அவர்களிடம் இருந்த இருப்பையும் வெறுப்பையும் தாங்களாகவே கிளர்ந்தெழுந்த மக்கள் நிரூபித்தனர் என்பது வாதமாக இருந்தது. ஜே.ஆரோ கைது செய்யப்பட்ட ஜே.வி.பி. ஆதரவாளர்களின் வீட்டில் சூறையாடப்பட்ட பொருள்கள் கைப்பற்றப்பட்டன என்றும், அக்குவானாஸ் பல்கலையில் படித்த மாணவர்கள் பலர் ஜே.வி.பியின் அங்கத்தினர்கள், அவர்களின் வகுப்புகளில் பங்கு பற்றியவர்கள், தகவல்களின் பெயரில் அவர்களுடைய வதிவிடங்கள் சோதிக்கப்பட்ட போது சூறையாடப்பட்ட பெருமளவு மது போத்தல்களும் வேறு பொருள்களும் கண்டு பிடிக்கப்பட்டன, இவை ஜே.வி.பி. திட்டங்களுக்கும் பங்குபற்றிச் சூறையாடியதற்கும் சாட்சிகள் என்றார்.

காமினி திஸநாயக்கா அடிப்பவர்களும் அணைப்பவர்களும் நாமே என்றார்.

ஆனால், உண்மை இன்றும் உறங்கிக் கிடக்கிறது.

(தொடரும்)

# திருக்கோவிலில் மேதின ஊர்வலம்



(வி.ரி. சகாதேவராஜா)

சர்வதேச தொழிலாளர்கள் தினத்தை முன்னிட்டு திருக்கோவில் பிரதேசத்தில் மாற்றத்திற்கான மேதின ஊர்வலம் நேற்று வியாழக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

திருக்கோவில் பிரதேச சபையில் போட்டியிடும் சுயேட்சை குழு ஒன்றின் தலைவர் சுந்தரலிங்கம் சசிகுமார் தலைமையிலான ஆதரவாளர்கள் மேற்கொண்ட நடைபவனி தம்பிலுவில் முனையூர் சந்தியில் ஆரம்பித்தது.

அப் பேரணி பதாதைகளை தாங்கி கோஷங்களை எழுப்பிய வண்ணம் திருக்கோவில் மணிக்கூட்டு சந்தியை சென்றடைந்தது.

பின்னர் அங்கிருந்து விநாயகபுரம் பிரதானவீதியூடாக கோரைக்களப்பு சமாதிபிள்ளையார் ஆலயம் திருக்கோவில் சென்றடைந்தது.

தொழிலாளர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள், சவால்கள் தொடர்பாக அங்கு கோஷம் எழுப்பினர்.

அவர்களின் சுபீட்சமான வாழ்வுக்கு அரசாங்கம் பல வேலை திட்டங்களை முன்வைத்து நடைமுறைப் படுத்த வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தமிழ் தேசிய பேரவையின் மே தினக் கூட்டம் நேற்று நெல்லியடி மாலுசந்தி மைதானத்தில்






தமிழ் தேசிய பேரவையின் மே தின எழுச்சி கூட்டம் நேற்று மாலை நெல்லியடி மாலுசந்தி மைதானத்தில் இடம் பெற்றது.

இதன் பொழுது தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தன்னுடைய இரு பிள்ளைகளை மாவீரராக இனத்திற்கு வழங்கிய தாயாரால் பொதுச் சுடரேற்றப்பட்டது . தொடர்ந்து மங்கள விளக்கேற்றி மே தின எழுச்சி கூட்டம் ஆரம்பமானது .

இதன் பொழுது தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செயலாளர் செல்வாராசா கஜேந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன், அருந்தவபாலன், எம். கே.சிவாஜிலிங்கம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாட்டாளர்கள், நலன் விரும்பிகள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.







# தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் உழைப்பாளர் தினக் கூட்டம் நேற்று

தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் செம்பசுமை உழைப்பாளர் தினக் கூட்டம் நேற்று பிற்பகல் யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் உள்ள இளங்கலைஞர் மண்டபத்தில் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் இடம்பெற்றது.

கூட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திர குமார் பொன்னம்பலம், ஜனநாயகத் தமிழரசுக் கட்சியின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா, தமிழ் தேசிய கட்சியின் தலைவர் சட்டத்தரணி ந.ஸ்ரீகாந்தா, அரசியல் செயற்பாட்டாளர் க.அருந்தவபாலன், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.









# மன்னாரில் மே தின பேரணியும் கூட்டமும்

(மன்னார் நிருபர்
எஸ்.ஆர்.லெம்பேட்)

சுரண்டல், ஒடுக்கு முறை மற்றும் அடக்கு முறைக்கு எதிராக மக்கள் திட்ட வரைவு ஒன்றியம் "விவசாய சக்தியைக் கட்டியெழுப்புவோம்" எனும் தொனிப் பொருளில் முன்னெடுத்த விவசாய மே தின பேரணி மற்றும் கூட்டம் நேற்று மாலை மன்னாரில் இடம் பெற்றது.

நேற்றுப் பிற்பகல் 2 மணி அளவில் மன்னார் பொது விளையாட்டு மைதான வீதியில் இருந்து மே தின பேரணி ஆரம்பமானது.

பேரணியில் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு பிரதான வீதியூடாக மன்னார் பஜார் பகுதியை நோக்கிச் சென்றனர்.

இதன் போது "பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை உடனடியாக நீக்கு!", "அநுர அரசே! காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்குஒ பதிலை தா!", "அரசியல் கைதிகளை உடனே விடுதலை செய்!", "விவசாயக் காணிகளை விகாரைக்குப் பறிக்காதே!", "காற்றாடி செயல் திட்டத்திற்கு அனுமதி அளிக்காதே!", "கச்சதீவை தாரை வார்க்காதே!", "இந்திய இழுவைப் படகுகளின் வருகையை நிறுத்து!", "காணி அபகரிப்பையும், அத்து மீறிய குடியேற்றத்தையும் நிறுத்து!" உள்ளிட்ட பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு பேரணியில் மக்கள் கலந்து கொண்டனர்.

பேரணியாக சென்றவர்கள் மன்னார் பஜார் பகுதியில் ஏற்பாடு செய்யப்பட்ட மே தின கூட்டத்தில் பங்கு கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் வடமாகாண மக்கள் திட்ட வரைவு ஒன்றியத்தின் பொது செயலாளர் நடராஜா தேவகிருஷ்னன், வளவ விவசாயிகள் உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பின் பிரதிநிதி சுதேஷ் கமகே, மன்னார் மாவட்ட மீனவ அமைப்புகளின் பிரதிநிதி என்.எம்.ஆலம், கிழக்கு மாகாண மக்கள் திட்ட ஒன்றியப் பிரதிநிதி கே.ருசிக்க, சர்வதேச கிராமிய விவசாய இயக்கத்தின் தெற்காசிய வலய பிரதிநிதி விமுக்திக சில்வா ரதுகள, பழங்குடி மக்கள் தலைவர் சுதார வன்னி லத்துகே ஆகியோர் உரை நிகழ்த்தினர்.













# ஆறாவது அனைத்துலக சைவ சித்தாந்த மாநாடு நாளை தொடக்கம் திங்கள் வரை சென்னையில்!

## வைத்தீஸ்வர குருக்கள் வாழ்த்துரை வழங்குவார்

தருமை ஆதீன அகில உலக சைவ சித்தாந்த ஆராய்ச்சி நிறுவனமும், எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகமும் இணைந்து நடத்தும் அகில உலக சைவ சித்தாந்த 6வது மாநாடு சென்னையில் உள்ள எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகத்தில் நாளை முதல் திங்கள் வரை (மே மாதம் 3, 4 மற்றும் 5 ஆகிய திகதிகளில்) மூன்று நாட்கள் நடைபெறுகின்றது.

தருமை ஆதீனம் திருமறையையும் திருமுறையையும் ஒருங்கே போற்றிப் பணிந்து வரும் மிகவும் தொண்மையான ஆதீனமாகும். அது, தமிழுக்கும் சமயத்திற்கும் என பல்வேறு வகையான சமூகப்பணி, கல்விப்பணி, சமயப்பணி, மருத்துவப்பணி என இடையறாது செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

இந்த மாபெரும் மாநாட்டில் பல்வேறு சைவ ஆதீனங்களின் மடாதிபதிகள், புகழ்பெற்ற சைவ சித்தாந்த அறிஞர்கள், தமிழ் மொழி ஆர்வலர்கள், ஆய்வுக் கட்டுரையாளர்கள் மற்றும் முக்கிய அரசியல் தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.



மேலும், இந்த மாநாட்டில் 300-க்கும் மேற்பட்ட சைவ சித்தாந்த ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட இருக்கின்றன. சைவ சித்தாந்தம் தொடர்பான 75புதிய நூல்கள் இந்த மாநாட்டின்போது வெளியிடப்படவுள்ளன. 8 அறிஞர் பெருமக்களுக்கு விருதுகள் வழங்கி சிறப்பிக்கபட உள்ளார்கள்.

இலங்கையில் இருந்து “சிவாகம கலாநிதி“ சிவஸ்ரீ. க. வைத்தீஸ்வர குருக்கள், கலாநிதி ஆறு திருமுருகன் ஆகியோர் மாநாட்டில் வாழ்த்துரை வழங்குகிறார்கள் என அறிவிக்கப்பட்டது. (ஆயினும் நல்லைக் குருமகா சந்நிதானத்தின் மறைவையொட்டி தமது தமிழகப் பயணத்தை ஆறு திருமுருகன் ரத்துச் செய்துள்ளார் என அறிய வந்தது.)

மேற்படி மாநாட்டில் பல சைவப் பெருமக்களும் கலந்து கட்டுரை சமர்ப்பணம் செய்கிறார்கள்.

சைவ சமயத்தின் பெருமையை உலகெங்கும் பரப்பும் இந்தப் பிரம்மாண்டமான நிகழ்வில் அனைவரும் கலந்து கொள்ளுமாறு தருமை ஆதீனம் 27 ஆவது நட்சத்திர குருமணிகள் அழைப்பு விடுத்துள்ளார்கள்.

பெருவிழாவாக நடைபெறும் மாநாடு சிறப்புடன் உயர்வுடன் மகிழ்வுடன் கூடியதாக அமைய வேண்டும் என இலங்கை வாழ் சைவ மக்கள் சார்பில் இந்துக் குருமார் அமைப்பினர் உறுதியுடன் இணைந்து வாழ்த்தி நிற்கிறார்கள்,என அமைப்பின் தலைவர், சிவாகம கலாநிதி சிவஸ்ரீ கு.வை.க வைத்தீஸ்வர குருக்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.



# இந்திய சுற்றுலாப் பயணிகள் அதிகமானோர் நாட்டுக்கு வருகை

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 887,389 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு பிரவேசித்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அத்துடன், ஏப்ரல் முதலாம் திகதியிலிருந்து 28 ஆம் திகதிவரை 165,113 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர்.

இந்தியாவிலிருந்தே அதிகளவான சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வந்துள்ளதுடன் அவர்களின் எண்ணிக்கை 35, 886 எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், பிரித்தானியாவில் இருந்து 16, 833 சுற்றுலாப் பயணிகளும், ரஷ்யாவிலிருந்து 12, 925 சுற்றுலாப் பயணிகளும், ஜேர்மனியில் இருந்து 11, 262 சுற்றுலாப் பயணிகளும் நாட்டிற்கு வந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.




# புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் மே தினப் பேரணியும், பொதுக்கூட்டமும் யாழில்

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் "புரட்சிகர மே தின பேரணியும், பொதுக்கூட்டமும்" நேற்றுப் பிற்பகல் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

மே தின பேரணி யாழ்.ஐந்து சந்தியில் இருந்து ஆரம்பமாகி யாழ் நகர் ஊடாக பயணித்து நிம்மர் மண்டபத்தை வந்தடைந்ததும் பொதுக்கூட்டம் ஆரம்பமானது.

பொருளாதார நெருக்கடிகளுக்கும், தேசிய இனங்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வுகளை வலியுறுத்தி குறித்த மே தின பேரணியும், பொதுக் கூட்டமும் இடம்பெற்றது.

நிகழ்வில் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சின் பொது செயலாளர் சி.கா.செந்திவேல், கட்சியின் வடபிராந்திய செயலாளர் கா.செல்வம் கதிர்காமநாதன், கட்சி உறுப்பினர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# பொகவந்தலாவ, அக்கரப்பத்தனை, கொட்டகலையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மே தின கூட்டங்கள்









இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மே தினக் கூட்டங்கள் நேற்று மூன்று இடங்களில் இடம்பெற்றன.

பொகவந்தலாவ, அக்கரப்பத்தனை மற்றும் கொட்டகலை ஆகிய பகுதிகளில் இந்த கூட்டங்கள் இடம்பெற்றன.

இந்தநிலையில்,பொகவந்தலாவயில் இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றிய இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், பெருந்தோட்ட மக்களுக்கு மீண்டும் அடையாள பிரச்சினை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ள போதிலும் மலையகத்துக்கான அங்கீகாரம் உரிய முறையில் கிடைக்கவில்லை எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் இதன் போது குறிப்பிட்டார்.

# மலையக மக்களின் பிரச்சினைகளை இந்தியப் பிரதமருக்கு எடுத்து விளக்க மலையக அமைச்சர்களுக்குத் தகுதியில்லை

## இப்படிக் கூறுகின்றார் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான்



(பொகவந்தலாவ எஸ்.சதீஸ்)

மலையக மக்களின் பிரச்சினைகளை இந்தியப் பிரதமருக்கு எடுத்துச்சொல்ல அரச தரப்பில் உள்ள மலையக அமைச்சர்களுக்குத் தகுதியில்லை என இலங்கைத் தொழிலாளர் காங்ரஸின் பொதுச்செயலாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

நேற்று வியாழக்கிழமை பொகவந்தலாவ நகரப்பகுதியில் இடம்பெற்ற தொழிலாளர் தின நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார். இதன் போது மேலும் கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் –

அண்மையில் இலங்கைக்கு இந்திய பிரதமர் வருகை தந்திருந்த போது மலையக மக்கள் தொடர்பாக ஒன்றும் பேசப்படவில்லை. அது இந்திய பிரதமரின் தவறில்லை.

சிலர் ஒரு கட்சிக்குக் கொடிபிடித்துக்கொண்டு இருந்ததை அவதானித்தோம். அவர்கள் இன்று ஆட்சியில் அமர்த்தப்பட்டுள்ளனர். இவர்களுக்கு குரங்கு கையில் பூ மாலை கொடுத்தார் போல் இருக்கிறார்கள். 25 வயதுப் பையன் நான். ஆயிரம் ரூபா சம்பளத்தைப் பெற்றைக் கொடுத்தேன். தோழர் இன்று 1700ரூபா பெற்றுதருவதாக அறிவித்துள்ளார். அதனை நான் வரவேற்கிறேன். ஆனால் 1360ரூபாய் அடிப்படை சம்பளத்தை இந்த அரசாங்கம் பெற்றுக்கொடுத்தால் எமது ஆதரவினை நாங்கள் வழங்குவோம்.

பத்து இலட்சம் மக்கள் தோட்ட தொழிலாளர்களின் அடையாளமாக மக்கள் வைக்கின்ற கோரிக்கையை பாராளுமன்றத்திலும் ஜனாதிபதியிடமும் கொண்டு சேர்க்கின்றோம். மலையகத்திற்கு இன்று அங்கீகாரம் கிடையாது. நுவரெலியா மாவடத்திற்கு அந்தஸ்துள்ள அமைச்சுக் கிடையாது. அதையும் தாண்டி ஆளுமை கிடையாது. வரலாறு தெரியாதவர்களுக்கு அடையாளத்தைக் காப்பற்ற முடியாது.

ஜனாதிபதியை நான் மதிக்கின்றேன். ஆனால் தலவாக்கலையில் வைத்து மலையக இளைஞர், யுவதிகள் தொடர்பில் அவர் பேசிய விடயங்களை எம்மால் எற்றுக்கொள்ள முடியாது. கஷ்டப்பட்டு உழைத்து அவர்களுடைய பிள்ளைகளுக்கு கல்வியை வழங்கும் மலையக மக்களுக்குக் கோவில் கட்டிக் கொண்டாட வேண்டும். தூங்குபவர்களை எழுப்பலாம். தூங்குவதை போல் நடிப்பவர்களை எழுப்ப முடியாது. மலையகத்தை பொறுத்த வரையில் சுயமரியாதைப் போராட்டம் அவசியம். பெருந்தோட்ட தொழிலாளர்களின் பிள்ளைகள் இன்று பல்வேறு துறையில் சாதித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

நாம் ஒரு சிறந்த உழைப்பாளர்கள்.

தொடர்ச்சி ▼



# மலையக மக்களின் பிரச்சினைகளை இந்தியப் பிரதமருக்கு எடுத்து விளக்க மலையக அமைச்சர்களுக்குத் தகுதியில்லை

தொடர்ச்சி▲

இந்த நாட்டில் உள்ள காடுகளை தோட்டமாக்கியதன் காரணமாகவேதான் இலவசக் கல்வி, இலவச சுகாதாரம் அனைத்தும் கிடைத்துள்ளன. மலையக மக்களுக்காக நான் குரல் கொடுத்தவன். ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொது தேர்தலுக்கு பிறகு நான் சென்று ஓடி ஒளியவில்லை. அன்றும் இன்றும் என்றும் நான் ஜீவன் தொண்டமான்.

தொழிற்சங்க பிரச்சினை, சம்பள பிரச்சினை ஆகியவற்றுக்கு நாங்கள் தான் குரல் கொடுக்கின்றோம். அடாவடித்தனத்தைக் காட்டினால் எங்களுக்கும் அடாவடித்தனத்தைக் காட்ட முடியும். மலையகத்தில் உள்ள ஏனைய கட்சிகளை நாம் வெறுக்கவேண்டிய அவசியமில்லை. அனைவரும் எம்மிடமிருந்து திருடிக் கொண்டு சென்றவர்கள். காங்கிரஸ் மக்கள் பக்கமே உள்ளது. எவர் சார்பாகவும் ஆதரவு வழங்காது.- எனக் குறிப்பிட்டார்.



# மு.கா செயலாளர் நிசாம் காரியப்பருடன் ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் சந்திப்பு

## பயங்கரவாத தடுப்பு சட்டம் உள்ளிட்ட விடயங்கள் குறித்து எடுத்துரைப்பு

(அஸ்லம் எஸ்.மௌலானா)

ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பரை நேற்று வியாழக்கிழமை கொழும்பில சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது அவர் பல விடயங்களை ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

இலங்கை தற்போது பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளும் கட்டத்தில், குறிப்பாக அமெரிக்காவின் எதிர்பாராத உயர்வு வரி விதிப்புகளின் மத்தியில், ஜி.எஸ்.பி பிளஸ் சலுகை இலங்கைக்கு வழங்கப்படுவது மிக அவசியமானது என்பதை எமது கட்சி முழுமையாக ஏற்றுக் கொள்கிறது.

இருப்பினும் ஸ்ரீலங்கா அரசாங்கம் சில விடயங்களில் நடந்து கொள்ளும் விதம் கவலைக்குரியதாக உள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

பயங்கரவாதத் தடுப்பு சட்டம் இரத்து செய்யப்பட்டு, சர்வதேச அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட மனித உரிமைத் தர நிலைகளுடன் முழுமையாக ஒத்துச் செல்லும் சட்டம் ஒன்று கொண்டு வரப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

புதிய சட்டம் அமுலுக்கு வரும் வரை, பயங்கரவாதத் தடுப்பு சட்டம் பயன்படுத்தப்படக் கூடாது., ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்கு மாத்திரம் ஒரு விதி விலக்கு இருக்கலாம்.

பயங்கரவாதத் தடுப்பு சட்டமானது கருத்து சுதந்திரத்தை அடக்குவதற்காகப் பயன்படுத்துவதை கடுமையாகக் கண்டிக்கிறோம். உதாரணமாக, பாலஸ்தீனத்தில் இஸ்ரேலின் கொடுமைகளை எதிர்த்து ஸ்டிக்கர் ஒட்டியதற்காக பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தை பயன்படுத்தி முஸ்லிம் இளைஞனை கைது செய்து, தடுத்து வைத்ததை ஏற்க முடியாது. அதை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம். இதற்காக உரிய இளைஞனிடம் அரசாங்கம் மன்னிப்புக் கோர வேண்டும்.

அத்துடன் மாகாண சபை தேர்தல் விரைவில் நடத்தப்பட வேண்டும். அதற்கு தேவையான சட்ட ஏற்பாடுகள் உடனடியாக செய்யப்பட வேண்டும்.

நாடாளுமன்ற ஜனநாயகத்திற்கு ஏற்ப அங்கு கட்சி தலைமைக்கான அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும். நாடாமன்ற உறுப்பினர்கள் எந்தக் கட்சியின் கீழ் தெரிவு செய்யப்பட்டிருந்தாலும் அவர்கள் உண்மையாகவே எந்தக் கட்சியை சேர்ந்தவர்களோ அதற்கான அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும். குறிப்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவுப் ஹக்கீம் முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற குழுவின் தலைவராக சபாநாயகர் ஏற்க மறுப்பதை சுட்டிக்காட்டிய செயலாளர் நிசாம் காரியப்பர், இது விடயத்தில் ஐரோப்பிய ஒன்றியம் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.




# யாழ். மாவட்டத்தில் தேர்தலுக்கு அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி

## தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் பிரதீபன் தெரிவிப்பு

நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபை தேர்தலுக்கான யாழ் மாவட்டத்தின் அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ள நிலையில் அவற்றுக்கான செயற்பாடுகளை மேற்கொள்ள துறை சார் அதிகாரிகள் தயாராக இருக்கின்றனர் என யாழ் மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார்.

யாழ் மாவட்ட செயலகத்தில் நேற்றையதினம் ஊடகவியலாளர்களைச் சந்தித்த அவர் இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு:-

யாழ் மாவட்டத்தில் 17 உள்ளூர் அதிகார சபைகள் இருக்கின்றன. அதில் ஒரு மாநகரசபை, 3 நகர சபைகள் மற்றும் 13 பிரதேச சபைகள்.

இந்த சபைகளில் உள்ள 243 வட்டாரங்களில் இருந்து உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக 3 ஆயிரத்து 519 வேட்பாளர்கள் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சை குழுக்களிலிருந்து போட்டியிடுகின்றனர்.

யாழ் மாவட்டத்தில் மக்கள் தமது வாக்குகளை அளிப்பதற்காக 517 வாக்களிப்பு நிலையங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் பிரதேச செயலாளர்களுக்கும் கிராம அலுவலர்களுக்கும் இந்த வாக்களிப்பு நிலையங்களைத் தயார்ப்படுத்தவதற்கான முழுமையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதேநேரம் 4 லட்சத்து 98 ஆயிரத்து 140 வாக்காளர்கள் இந்தத் தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

அத்துடன் தேர்தல் கடமைகளுக்காக 6 ஆயிரத்து 320 அதிகாரிகளும் 1,048 பொலிஸ் உத்தியோகத்தர்களும் கடமையாற்றவுள்ளனர்.

மே மாதம் 05 திகதி காலை 08 மணியில் இருந்து யாழ் மத்திய கல்லூரியில் இருந்து வாக்குப் பெட்டிகள் மற்றும் வாக்குச் சீட்டுகள் உள்ளிட்ட ஆவணங்கள் பஸ்கள் மூலமாக வாக்களிப்பு நிலையங்களுக்கு கொண்டு செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேநேரம் யாழ் மாவட்டத்தில் 243 வாக்கெண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அத்துன் தேர்தலுக்கான இணைப்பு அலுவலகங்களாக பிரதேச செயலகங்கள் செயற்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறிப்பாக பிரதேச செயலாளர்கள் மற்றும் உதவி பிரதேச செயலாளர்கள், நிர்வாக கிராம அலுவலர்கள் என அங்கு ஓர் இணைப்பு அலுவலகம் ஏற்பாடு செய்யப்பட்டள்ளது.

இவற்றுக்கு மேலாக வட்டார ரீதியாக வாக்களிப்பு மேற்பார்வை செயற்பாட்டுக்காக மேலதிகமாக 243 இணைப்பு வட்டார உதவி தேர்தல் அத்தியட்சகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அந்த உதவி தேர்தால் அத்தியட்சகர்களே வாக்களிப்பு நிறைவுற்றதும் வாக்கெண்ணும் நிலையங்களின் பிரதம அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

உள்ளூராட்சி சபைக்கான போக்குவரத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. இலங்கை போக்குவரத்து சபைக்கான 50 பஸ்களும், 143 தனியார் பஸ்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை பருத்தித்துறை பிரதேசத்தில் உள்ள இடம்பெயர்ந்தவர்களை ஏற்றி வருதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதேபோன்று தீவக போக்குவரத்து தொடர்பாக குறிப்பாக நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு பகுதிகளுக்கு கடற்படை தளபதியிடம் கலந்துரையாடி ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதேநேரம் 28 மற்றும் 29 ஆம் திகதிகளில் நடைபெற்ற தபால் மூல வாக்கெடுப்பு நிறைவுற்றுள்ள நிலையில் 292 அஞ்சல் வாக்கெடுப்பு நிலையங்களில் நடைபெற்றது.

அந்தவகையில் யாழில் ஏற்றுக் கொள்ளப்பட்ட வாக்காளர்களாக 21,064 காணப்பட்டது. இதில் வாக்களிக்கப்பட்ட 20,659 வாக்குச் சீட்டுக்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதில் 20 ஆயிரத்து 548 வாக்களிக்கப்பட்டதும் 111 வாக்களிக்கப்படாத வாக்குச் சீட்டுக்களும் கிடைக்கப் பெற்றுள்ளன.

மேலும் 405 வாக்குச் சீட்டுக்கள் எமக்கு கிடைக்கப்பெறவேண்டும். இவை நாளையதினம் எமது அலுவலகத்திற்கு கிடைக்கப்பெறும்.

இவ்வாறு பெறப்பட்ட வாக்களிக்கப்பட்ட வாக்குச் சீட்டுக்கள் எதிர்வரும் 5 ஆம் திகதி சிரேஸ்ஷ்ட தலைமை தாங்கும் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படும்.

அவற்றை அவர்கள் 6 ஆம் திகதி நடைபெறவுள்ள வாக்கெடுப்பு நிலையங்களுக்கு கொண்டுசென்று அன்றிரவு வாக்கெண்ணும் நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள்.

இதிலும் 50 இற்கும் குறைவான வாக்ககள் இருக்கின்ற பெட்டிகளில் அவை அந்த வாக்கெண்ணும் நிலையங்களில் மேற்கொள்ளப்படும். அதேநேரம் 50 இற்கும் அதிகமான வாக்குகள் இருப்பின் அந்த வாக்கெண்ணும் நிலையத்தில் தனியான நிலையத்தில் அவை கணக்கெடுக்கப்படும். - என்றார்.

உள்ளூராட்சி தேர்தலில் யாழ் மாவட்டத்திலே 94 தேர்தல் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக 4 வன்முறை சம்பங்களும், 90 சட்ட விரோத மீறலும் இடம்பெற்றுள்ளன. அவை தொடர்பில் தேர்தல் முறைப்பாட்டு அலுவலகத்தில் முறைப்பாடுகள் கிடைக்கபெற்று, யாழ் மாவட்ட தேர்தல் அலுவகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளதகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

## வரணி வைத்தியசாலையில் அம்புலன்ஸ் இன்மையால் அண்மையில் 4 உயிர்கள் அநியாயமாகப் பறிபோயின

### தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் ஞானநிரோஷன் கூறுகின்றார்

(த.சுபேசன்)

தென்மராட்சி – வரணிப் பிரதேச வைத்தியசாலையில் நோயாளர் காவு வண்டி இன்மையால் அண்மையில் வரணிப் பகுதியைச் சேர்ந்த நான்கு உயிர்கள் அநியாயமாக பறிபோயுள்ளன என தேசிய மக்கள் சக்தியின் சாவகச்சேரிப் பிரதேசசபை வேட்பாளர் பா.ஞானநிரோஷன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் வரணி மாசேரிக் கிராமத்தில் இடம்பெற்ற பிரசார நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் –

தேசியம் கதைக்கும் களம் உள்ளூராட்சிசபைகள் அல்ல. இது மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கான களம்.

சாவகச்சேரிப் பிரதேசசபைக்கு உட்பட்ட சந்தைகள் உரிய விதத்தில் இயங்குவதில்லை.

மயானங்கள் பாலைவனங்களாக உள்ளன. மயானங்களுக்குச் செல்லும் வீதிகள் பெரும் குன்றும் குழியுமாக உள்ளன. மாரி காலத்தில் உடல்களைத் தகனம் செய்ய வரணிப் பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் சாரதியின் தவறால் வரணி வைத்தியசாலையின் நோயாளர்காவு வண்டி விபத்துக்குள்ளானது. இதனால் இன்று வரை வைத்தியசாலைக்கு நோயாளர் காவு வண்டி இல்லை. இதனால் உரிய நேரத்தில் மேலதிக சிகிச்சைக்காக நோயாளர்களை அனுப்பி



வைக்க முடியாத நிலை காணப்படுகிறது.

கடந்த சில மாதங்களுக்குள் வரணிப் பகுதியைச் சேர்ந்த நான்கு உயிர்கள் அநியாயமாக பறிபோயுள்ளன. – என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

## வவுனியா பொலிஸ் நிலையத்தை இடம் மாற்றி வியாபாரக் கட்டடத் தொகுதி அமைக்கப்படும்

### சுயேட்சை வேட்பாளர் கிரிதரன் தேர்தல் வாக்குறுதி



(கி.வசந்தன்)

வவுனியா நகரசபைக்குட்பட்ட காணியில் அமைந்துள்ள தலைமைப் பொலிஸ் நிலையத்தை அகற்றி அந்த இடத்தில் நவீன வியாபாரத் தொகுதி ஒன்று அமைக்கப்படும் என வவுனியா மாநகர சபைக்குக் கோடாலிச் சின்னத்தில் போட்டியிடும் சுயேச்சைக் குழு வேட்பாளர் சி.கிரிதரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக நேற்று அவர் மேலும் கருத்து தெரிவித்த போது –

இந்தத் தேர்தலில் பல கட்சிகள் போட்டியிடுகின்றன. அனைவரும் கூறுகின்றனர் தாங்கள் ஆட்சிக்கு வந்தால் வீதியை புனரமைப்போம், வடிகால் அமைப்போம், கழிவகற்றுவோம் என்று. இவையெல்லாம் அந்தந்த சபைகளின் கடமைகள். சபை இருந்தாலும் இல்லாவிடிலும் அது நடந்துகொண்டே இருக்கும். அவற்றை மேம்படுத்த வேண்டும்.

அதனை விட மக்களின் பிரச்சினைகள் ஏராளமாக இருக்கின்றன. தேவைகள் இருக்கின்றன. நாங்கள் ஆட்சியமைத்தால் இந்த விடயங்களை மேலும் வலுப்படுத்துவதுடன், மக்களின் தீர்க்க முடியாத பிரச்சனைகளை அடையாளம் கண்டு இலகுவாக்கி தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்போம்.

அத்துடன், வவுனியா நகரப்பகுதி இன்று முக்கிய வியாபாரமையமாக மாறிக்கொண்டு வருகின்றது. அதனால் நகரில் ஒரு நெருக்கடி நிலையும் ஏற்படுகின்றது. ஆனால் நகரசபைக் குட்பட்ட காணியில் வவுனியா தலைமை பொலிஸ் நிலையம் அமைந்துள்ளது.

நாங்கள் ஆட்சியமைத்தால் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொலிஸ் தலைமையகத்துடன் கலந்துரையாடி பொலிஸ் நிலையத்தை அந்த இடத்தில் இருந்து மாற்ற நடவடிக்கை எடுப்போம்.

அங்கு நவீன வியாபாரத் தொகுதி ஒன்றை அமைத்து ஒரு வாகனத் தரிப்பிடத்தையும் அமைப்பதற்கான முயற்சிகளை எடுப்போம். எனவே ஆட்சி அதிகாரம் எமக்கு கிடைத்தால் இந்த திட்டங்களை செயற்படுத்துவோம். – என்றார்.

# இன்றைய ராசி பலன்கள் - 02.05.2025

## மேஷம்

இன்று சவால்களை சந்திக்க அமைதியான போக்கை மேற்கொள்ள வேண்டும். உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும். அமைதியுடனும் கட்டுப்பாடுடனும் இருக்க வேண்டும்.

நீங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க மாட்டீர்கள். சக பணியாளர்கள் ஆதரவாக இருக்க மாட்டார்கள். அவர்களால் சில தொல்லைகள் ஏற்படும்.

உங்கள் துணையிடம் குழப்பமான உணர்வுகளை வெளிபடுத்துவீர்கள். இதனால் சில விரும்பத்தகாத தருணங்கள் காணப்படும்.

உங்கள் குழந்தையின் ஆரோக்கியத்திற்காக செலவு செய்ய நேரும். இதனால் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாமல் பணப்பற்றாக்குறை ஏற்படும்.

பதற்றம் காரணமாக கால் வலியால் அவதிப்பட நேரலாம்.

## ரிஷபம்

இன்று மிதமான வளர்ச்சி காணப்படும். பொறுமையும் உறுதியும் இருந்தால் இலக்கில் வெற்றி அடையலாம்.

நேரமின்மை காரணமாக பணியில் தாமதங்கள் ஏற்படலாம். பணியில் நீங்கள் தவறுகள் செய்ய நேரலாம். பணிகளை கவனமாகச் செய்ய வேண்டும்.

உங்கள் அன்பை உங்கள் துணையிடம் வெளிப் படுத்த இயலாத சூழ்நிலை காணப்படும். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க வேண்டும். எதிர்மறை எண்ணங்களை விலக்க வேண்டும்.

பண வரவு மகிழ்ச்சிகரமாக இருக்காது. இன்று பண வரவிற்கான அதிர்ஷ்டம் காணப்படாது. தேவையற்ற விஷயங்களுக்காக இன்று பணம் செலவு செய்ய நேரும்.

மன உளைச்சல் காரணமாக தொடை மற்றும் கால் விரல்களில் வலி ஏற்படலாம்.

## மிதுனம்

இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறும் நாள். இன்று மன அமைதியுடன் காணப்படுவீர்கள். இன்று எடுக்கும் முடிவுகள் நற்பலன்களைத் தரும்.

பணிகள் சுமுகமாக நடக்கும். உங்கள் திறமை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.பணியில் உங்கள் செயல்திறனுக்கான அங்கீகாரம் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிப்பீர்கள். இரவரும் நல்ல புரிந்துணர்வை பகிர்ந்து கொள்வீர்கள்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். நிதி நிலையை நன்கு சமாளிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.

## கடகம்

இன்று மனதில் பதற்றங்கள் அதிகமாக காணப்படும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக்கொள்ள வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பது அல்லது புதிய முயசிகள் தவிர்க்கப்பட வேண்டும். பிரார்த்தனை மற்றும் தியானம் ஆறுதல் தரும்.

பணிகளைக் கையாள்வது சவாலாக இருக்கும். நேரம் செலவு ஆகும். உங்கள் கீழ் பணி புரிபவர்களுடன் பிரச்சினை ஏற்பட வாய்ப்புள்ளது என்பதால் பொறுமை அவசியம்.

மனதில் இருக்கும் பதற்ற காரணமாக உங்கள் துணையுடன் விவாதத்தில் ஈடுபடுவீர்கள். அமைதியாக உங்கள் உணர்வுகளை உங்கள் பிரியமானவரிடம் வெளிப்படுத்த வேண்டும்.

## சிம்மம்

இன்று மகிழ்வாக இருப்பதற்கு சாதகமான நாளாக அமையாது. ஆன்மீகப் பயணங்கள் ஆறுதல் தரும். இன்றைய சவால்களை தன்னம்பிக் கையுடனும் உறுதியுடனும் எதிர் கொள்ள வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணியில் கூடுதல் பொறுப்புகள் ஏற்க நேரும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் இருவரிடையே கருத்து வேறுபாடு காணப்படும் இதனால் உங்கள் துணையுடன் சிறந்த உறவை பராமரிக்க இயலாது.

பண இழப்பு காணப்படுகின்றது. பணத்தை சாதுர்யமாகவும் கவனமாகவும் கையாள வேண்டும்.

மன உளைச்சல் காரணமாக இன்று கால் வலி உபாதைகள் ஏற்படலாம்.

## கன்னி

இன்று சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். கடினமான சூழ்நிலைகளை சமாளிக்க மிகுந்த பொறுமை அவசியம். நம்பிக்கையுடன் செயல்பட்டால் பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமையும்.

இன்று அதிக பணிச்சுமைகள் காணப்படும். நீங்கள் திறமையுடன் பணியாற்ற உங்கள் பணிகளை திட்டமிட வேண்டும்.

உங்களின் அகந்தைப் போக்கு உங்கள் துணையுடனான பிணைப்பை பாதிக்கும். உங்கள் கடுமையான வார்த்தைகள் அவரை பாதிக்கும். உங்கள் பிரியமானவருடன் மகிழ்ச்சியாக இருக்க இதனை தவிர்த்தல் வேண்டும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது.

## துலாம்

இன்று முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். முன்னேற்றம் பெறுவதற்கான வலிமையையும் உற்சா-கமும் உங்களிடம் காணப்படும். இன்று அனைத்து விதத்திலும் செழிப்பாக இருக்கும்.

புதிய வாய்ப்புகளால் உற்சாகமும் திருப்தியும் காணப்படும். உங்கள் பணிகளை மகிழ்வுடன் செய்வீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இதனால் உங்கள் இருவருக்கும் இடையே நெருக்கம் அதிகரிக்கும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். ஸ்திரமான நிதிநிலை காணப்படும்.

மகிழ்ச்சியின் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சீரும் சிறப்புமாக இருக்கும்.

## விருச்சிகம்

இன்று முனேற்றகரமான பலன்கள் கிடைக்கும். பயணங்கள் காணப்படும். ஆன்மீக ஈடுபாடு மூலம் மனத்தெளிவு கிடைக்கும். இதனால் கடினமான சூழ்நிலையையும் நீங்கள் எளிதாக கையாள்வீர்கள்.

பணி நிமித்தமான பயணம் காணப்படும். இன்று மும்மரமான பணிகள் காணப்படும். கடின உழைப்பின் மூலம் நீங்கள் வெற்றி பெறலாம்.

உங்கள் துணையுடன் நேர்மையான அணுகுமுறை கொள்வீர்கள். இதனால் உங்கள் இருவரிடையே நெருக்கம் காணப்படும்.

இன்று நிதி வளர்ச்சி திருப்தியை அளிக்கும். கணிசமான தொகை சேமிப்பீர்கள்.

இன்று மகிழ்ச்சி மற்றும் உற்சாகமான நம்பிக்கை காணப்படும். இதனால் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 02.05.2025




இன்று சிறிது மந்தமாக காணப்படும். பாதுகாப்பின்மை உணர்வு உங்களிடம் காணப்படும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொண்டால் அதில் நற்பலங்களைக் காண முடியும்.

பணியில் கூடுதல் பொறுப்புகளை சுமக்க நேரும். கவனமாகப் பணியாற்றுவதன் மூலம் உங்கள் திறமை மேம்படும்.

இன்று நீங்கள் அற்பமான விஷயங்களைக் கூட பெரிதாக்குவீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் பாதிக்கப்படும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. பணம் குறைந்து காணப்படும். பணம் சம்பாதிக்கும் வாய்ப்பும் குறைந்து காணப்படும்.

உங்கள் தந்தையாருக்கு உடல் நல பாதிப்பு ஏற்படும்.




இன்று வளர்ச்சி காணப்படும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலனைத் தரும்.

பணியிடத்தில் திருப்தி நிலவும். பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும். மகிழ்ச்சியுடன் பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு காணப்படும். உங்கள் சகஜமான அணுகுமுறை மூலம் இது சாத்தியம்.

பணப்புழக்கம் சீராக இருக்கும். உங்கள் சேமிப்பு உயரும். நீங்கள் மகிழ்வுடன் இருப்பீர்கள்.

உங்கள் மனதில் காணப்படும் அமைதி காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று தன்னம்பிக்கை குறைவாகவும், நம்பிக்கையின்மையும் காணப்படும். உங்கள் லட்சியங்களை அடைவதில் தடை காணப்படும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிகளில் தவறு நேர வாய்ப்பு உள்ளது. உங்கள் பணிகளை திட்டமிட்டு திறமையுடன் ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபட வாய்ப்புள்ளது. உறவில் அமைதி ஏற்பட இத்தகைய போக்கை தவிர்த்தல் அவசியம்.

இன்று பண இழப்பு காணப்படுகின்றது. பயணத்தின் போது பண இழப்பு ஏற்படலாம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. தலை வலி மற்றும் உயரமுத்த வாய்ப்புகள் காணப்படும்.




இன்று பல உற்சாகமான தருணங்களை நீங்கள் சந்திக்கலாம். புதிய கட்ட வளர்ச்சி காண்பீர்கள். திட்டமிட்டு பணியாற்றுவதன் மூலம் உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள்.

நற்பெயரும் அங்கீகாரமும் கிடைக்கப் பெறுவீர்கள். பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும்.

உங்கள் துணையுடன் அன்பைப் பகிர்ந்துகொள்வீர்கள். இது இருவருக்கும் இடையே பரஸ்பர புரிந்துணர்வை வளர்க்கும்.

பண வரவு சிறப்பாக இருக்கும். கணிசமான தொகை சேமிப்பீர்கள். பயனுள்ள விஷயங்களுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் ஆற்றலுடனும் ஆரோக்கியத்துடனும் காணப்படுவீர்கள்.




# வவுனியாவில் சுகாதார பரிசோதகர்களின் கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் இருவர் கைது

(கி.வசந்தன்)

வவுனியா நகரத்தில் சுகாதார பரிசோதகரின் கடமைக்கு இடையூறு விளைவித்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என வவுனியா பொலிஸார் தேற்றுத் தெரிவித்தனர்.

வவுனியா – யாழ் வீதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் வாகனம் ஒன்றில் வந்த இருவர் உணவுப்பொருள்களை விற்பனை செய்துள்ளனர்.

அந்த வாகனத்தை சுகாதாரப் பரிசோதர்கள் பரிசோதனை செய்ய முற்பட்ட போது விற்பனையாளர்களினால் அவர்களின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்தப்பட்டது. இதனால் அந்த பகுதியில் சற்றுநேரம் குழப்பநிலை ஏற்பட்டது.

எரிபொருள் நிரப்பு நிலையத்தின் அருகில் தின்பண்டங்களை விற்பனை செய்வதனால், உணவில் நச்சுவாயுக்கள் கலக்கும் சந்தர்ப்பம் ஏற்படுவதுடன் அந்தபகுதியில் கழிவுநீர் வழிந்தோடும் கால்வாயும் காணப்படுகின்றது. எனவே இவ் வாகனத்தை வேறு பகுதிக்கு எடுத்துச் சென்று அங்கே விற்பனை செய்யுமாறு சுகாதார பரிசோதகர்களால் தெரிவிக்கப்பட்ட போதும் விற்பனையாளர்கள் அதனை ஏற்க மறுத்தனர்.

இதனை அடுத்து சுகாதார பரிசோதகர்களால் வவுனியா பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு வருகைதந்த பொலிஸார் இருவரையும் கைது செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.